377 377

Regd. No. M. 2210 | வருஷ சந்தா ரூ. 1-8-0

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி

JAGANMOHINI

மாதாந்த நாவல் சஞ்சிகை

மலர் 10 || 1933ஞு பிப்ரவரி மீ || இதழ் 3

8 - MAR 1933

ஆ.. நகரின் வேண்டுகோளுக் கிணங்கி
தனிப்பிரதியின் விலை உள்நாட்டில்
இரண்டணுவாக்கப்பட்டது.

பல பரிசுகள் இனும்!

<u>பிரவேசக் கட்டணம் ஒன்றுமில்லை</u>

முழு விவரங்களுக்கு இதனுள்ளிருக்கும்
விளம்பரத்தைக் கவனியுங்கள்

"...மோகினி" ஆபீஸ்,
... திருவல்லிக்கேணி, மதராஸ்.

3L
ஊ211,N24J M
N33·16·3.
210039

தனிப் பிரதி விலை உள்நாடு அணா 2 வெளிநாடு அணா 3

...மாதமும் கடைசித் தே...யில் சஞ்சிகை வெளியாகும்.

50 ரூபாய் பரிசுகள்

ஒரு வருஷ சஞ்சிகை இனும்

ஏப்ரல் மாதம் 25 தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கப்படும்.

முதல் பரிசு ரூ. 15 3-வது பரிசு ரூ. 10
2-வது பரிசு ரூ. 10 ஐந்து ரூபாயில் மூன்று பரிசுகள்

ஏற்கெனவே சந்தா செலுத்தியவர்களும் மேற்கண்ட பரிசுப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டுமோயின் குறைந்தது ஒரு புதிய சந்தாவைச் சேர்த்தனுப்பவும். ஒரு வருஷ சஞ்சிகை இனுமாக வேண்டுவோர் ஐந்து சந்தா நேயர்களைச் சேர்த்தனுப்பவேண்டும்.

பரிசுகளின் விவரம்

இம்மாதம் 25-தேதிக்குள் சந்தா அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்குப் பரிசுகள் விழுந்திருக்கின்றன. அவர்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களையோ, கதர் உடைகளையோ தெரிவித்தால் அனுப்புகிறோம்.

பரிசு ந.	ரூ.	சந்தா ந.	
1.	15.	A. 30.	Mr. M. Abdul Kader, Naungpatya.
2.	10.	M. 106.	,, J. Mahalingam, Ramachandrapur.
3.	10.	T. 54.	Mrs. Thara Bai, Nagpur.
4.	5.	A. 201.	Mr. S. Abdul Hameed, Singapore.
5.	5.	K. 246.	,, S. K. Krishnamurthy, Indore.
6-	5.	S. 526.	Mrs. Sarasvathi Ammal, Triplicane.

இனிமேல் வி. பி. யில் அனுப்பமுடியாது.

வி. பி. யில் புத்தகங்களைப் பெறுவோர்க்கு அதிக செலவுண்டாவதுடன் அனாவசியமான கால தாமதமும், தொந்தரவும் ஏற்படுவதால் இனிமேல் யாவரும் முன்பண மனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்புகிறோம். ஐந்து ரூபாய்களுக்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கள் ரூபாய்க்கு இரண்டணா விகிதம் தபாற் செலவுக்காகச் சேர்த்தனுப்பவும்.

OFFICE OF THE REGISTRAR OF ... MAR 1933 MADRAS

50 பேர்களுக்குத்தான் அனுப்பப்படும்.

நமது பழைய சந்தா நேயர்களில் சிலர் இவ்வாண்டுச் சந்தாவை யனுப்பும்போது "சென்ற ஆண்டில் நமது நூலாசிரியை தேசிய விஷயமாகச் சிறைவாசம் செய்ததால் சஞ்சிகை சரி வர நடக்குமோ, நடக்காதோ என்று தமது சந்தாவை அனுப்பவில்லை யென்றும், தங்களது பழைய ஆதரவை முன்னிட்டுத் தமக்குச் சென்ற ஆண்டில் வெளி யான (பரிமளகேசவன், மூன்று வைரங்கள், உத்தமசீலன்) புத்தகங்களைச் சந்தா (ரூ. 1—8—0) விலைக்குக் கொடுக்க வேண்டுமென்றும் எழுதுவதால் அவர்களது ஆவலைப் பூர்த்தி செய்யக் கருதி 50 பேர்களுக்கு இந்தக் குறைந்த விலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம். வேண்டியவர்கள் உடனே ரூ. 1—8—0 முன்பண மனுப்பிப் (வி. பி. கிடையாது) பெற்றுக் கொள்ளவும். மேற்படி புத்தகங்களின் முழு விலை ரூ. 3 என்பதைக் கவனிக்கவும்.

நீங்கள் இன்னும்

"கதம்பமாலை"யை

படிக்கவில்லையா?

அப்படியாயின் பின்கண்டுள்ள அபிப்பிராயங்களைப் படித்தவுடனேயாவது ஒரு புத்தகத்தை வரவழைத்து ஆனந்தமடையுங்கள்.

விலை ரூ. 1/— சந்தா நேயர்களுக்கு விலை அணா **14** தான் முன்பணமனுப்பித் தபால் செலவின்றி பெற்றுக் கொள்ளுங்கள். வி. பியில் அனுப்பமுடியாது.

600 008

மதிப்புரை

அமிர்தகுணபோதினி (ஆங்கிரஸ ஹூ மாசி மீ)

இதனில் 13 - சிறு கதைகளும், நாவல்களும் அடங்கியுள்ளன. ஒவ்வொன்றும் அழகாக உத்தமமான நீதி போதனைகளுடனும், சமத்காரமான கற்பனைகளோடும் முடிக்கப் பெற்றுள்ளது. அவற்றின் அருமையை வாசகர்கள் எளிதி லுணர்ந்துகொள்வர். கதைகளை இயற்றும் முறையில் இதன் ஆசிரியரது விசாலமான நடையும், வடுவூர் ஸ்ரீமான் துரைசாமி ஐயங்காரவர்களின் விசாலமான நடையும் ஒன்றையொன்று அனுசரித்து நிற்கின்றன. இவ்விதம் வரைவதை மற்ற ஆசிரியர்களிடம் காண முடியவில்லை. பிரதி பக்கங்கள் தோறும் அடியில் குறிப்பிட்டுள்ள அனுபவங்கள் மிக்க ருசிகரமாயுள்ளன. ஸ்ரீமதி அம்மையார் ஒரு பெரிய அனுபவ ஞானியாகவே அந்தக் குறிப்புகளின்மூலம் தோன்றுகின்றார். தமிழில் பல நாவல்களை உதவிய பண்டிதை விசாலாக்ஷியம்மாளுக்குப் பிறகு ஸ்ரீமதி கோதைநாயகியம்மாளைச் சிறப்பித்துப் பேசும் வண்ணமாக 18 - நவீனங்கள் வரையும் இயற்றி வெளியிட்டுள்ள அருமை போற்றற்பாலது. இவ்வாறாக, பல சிறந்த நூல்களை இயற்றும் ஆற்றலைத் தமது கல்வி விசேஷத்தாலும், பிறவி ஆசிரியத் தன்மையாலும் இவர் பெற்றுள்ளார். இவரது நூல்கள் ஒவ்வொன்றும் பெண்மணிகள் யாவரானும் விருப்பமாய் வாசித்தற்குரியதாகும். "கதம்பமாலை" என்று இந்நூலுக்கு இட்டுள்ள பெயர் மிகப் பொருத்தமாயும் திவ்யமாயும் உள்ளது. எளிய நடையில் கவிதை புனைவது கடுமையான தொழில். அவ்விதமே சிறு கதைகளை இயற்றுவதும் மிகு பிரயாசையுள்ள நுட்பமான வேலை. இவரது நவீனங்கள் தமிழ் நாட்டில் பலராலும் வாசிக்கப்பட்டுச் சிலாகிக்கப்படுகின்றன.

ஒரு நிருபம்

பாரத நாட்டின் பாக்கியத்தால் உதித்த மாது ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்களின் திவ்ய சமூகத்திற்கு அனேக வந்தனம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதவும்.

சகோதரியே !

நான் இன்னாளென்பதைத் தாங்கள் அறியாமலிருக்கையிலும், என் மனத்தில் எழுந்த ஆர்வத்தைத் தடுக்க முடியாமல் இக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன். நான் இந்தத் தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்தும் தமது பத்திரிகையொன்று நடைபெறுகிற தென்பதை இதுவரையில் அறியேன். தற்செயலாக எனது சிநேகிதையின் வீட்டிற்குச் சென்றபோது அங்கிருந்த இம்மாதத்திய அமிர்தகுணபோதினியைப் படிக்கையில், தமது கதம்பமாலையைப் பற்றிய மதிப்புரையைக் கண்டேன். அநுபவக் களஞ்சியமாகிய ஸ்ரீமான் நாயுடுவின் விசேஷ மதிப்புக்குப் பாத்திரமாகிய அந்நூலைப் படிக்க அப்போதே ஆவல் தூண்டியதால் நானும் எனது சிநேகிதையும் அப்புத்தகத்தை வாங்கிப் படித்துப் பேரானந்தமடைந்தோம். முன்பின் னறியாத உங்களுக்கு இக் கடிதத்தை எழுத வேண்டுமென்கிற ஆசையை அது அதிகப்படுத்தியது. ஆனால் வயதிலும், அறிவிலும் சிறியவளாகிய எனது மனத்தில் பொங்கும் ஆனந்தத்தை எந்த விதமாக எழுதுவதென்று தெரிய வில்லை.

கதம்பமாலையிலுள்ள ஸாஸராஜனைப் படித்த எந்தப் பெண்மணியும் ஆடம்பரத்தையும், அந்தஸ்தை மீறிய ஆசையையும் நகை விஷயத்தில் கொள்ளமாட்டாளென்று கண்டிப்பாய் நம்புகிறேன்.

வெட்கத்தின் விபரீதம் என்கிற கதையைப் படித்ததும் எனது அநுபவத்தில் நடந்த விஷயமே எனக்கு ஞாபகத்திற்கு வந்து அடங்காச் சிரிப்பை யுண்டாக்கியது. தாய்ப் பாஷையை மதியாத படாடோப பரமேச்வரன் என்கிற கதையைப் படித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிட்டது. அன்னிய பாஷையை இனி அரை குறையாக (பட்ளர் இங்கிலீஷ்) நானும் உபயோகிக்கக் கூடாதென்று தீர்மானித்து விட்டேன். கதம்பமாலையிலுள்ள 13 கதைகளும் தேனென இனித்தன.

தாங்கள் இதுவரை எழுதியுள்ள எல்லா புத்தகங்களையும் படிக்க வேண்டுமென்ற அவா உதித்ததால் இதனுடன் ரூ. 20 அனுப்பியிருக்கிறேன். என்னை உங்களது சஞ்சிகைக்கு ஒரு சந்தாதாரியாகச் சேர்த்துக்கொண்டு, கதம்பமாலையின் கடைசிப் பக்கத்தில் விளம்பரப் படுத்தியுள்ள 17 நாவல்களையும் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆசை வெட்கமறியாது என்கிறபடி நான் ஏதோ எழுதி விட்டேன். குற்றங்களைப் பொறுக்கவும்.

இங்ஙனம்
தங்கள் சகோதரி
ஜெயலக்ஷ்மி

HAVE YOU READ

"UTTHAMASEELAN"

THE LATEST NOVEL OF

Mrs. V. M. Kothainayaki Ammal.

which will move to tears even stony hearts. If not yet, read the critical review about it and get your copy immediately as there is only a small stock of same.

Mr. R. R. Chari, B.A., Mettur, writes:—

" The authoress succeeds again in writing a masterly tragedy—an attempt seldom made by novelists. This novel embraces a new sphere of thought and plot and deleneates a true friend and a devotional wife. The character of Utthama, the patience exhibited by him in most trying circumstances, even when he was maltreated unjustly......are all depicted in such a vivid pathetic strain that every reader cannot but feel that TREACHERY IS ITS OWN REWARD, EVIL UNTO HIM WHO EVIL THINKS......The exposition of the authoress at each stage of development of the plot carries the reader to a sense of overwrought feeling and a high sense of pathos. The parental duty even amidst the most excruciating mental agony and sorrow noticed in Utthama will be a lesson to youthful minds to follow suit............

The finishing stroke of the authoress is a masterpiece which few have reached upto now. It is hoped that the authoress will publish soon some more novels of this type...........

Price Rs. 1/ – only to subscribers.

Price Rs. 1/4 to non-subscribers.

POSTFREE ON RECEIPT OF THE AMOUNT (No. V.P.P)

4-வது அதிகாரம்

கவலைக் கடலில் களிப்பு முண்டோ?

210039

தனது உயிரென மதித்து அன்பு செலுத்திய திலகவதி அடுத்த சந்தில் புகுந்து மறைந்து விட்டதும் சற்று நேரம் சுகுமாரன் ஒன்றுமே தோன்றாது மௌனம் சாதித்து அவ்வணங்கு சென்ற திக்கையே உற்று நோக்கியவாறு நின்றான். தானும் பின் தொடர்ந்து அவள் எந்த வீட்டிற்குச் செல்கிறாள் என்பதை அறியலாகுமா? என்று எண்ணினான். ஆனால் திலகவதி கூறிய மொழிகள் உடனே அவன் நினைவிற்கு வந்ததால் தான் அவ்வாறு செய்வது தப்பிதம் என்று எண்ணி அவ்விடத்திலேயே நின்றான். மீண்டும், "நான் அவ்விடத்திற்கு வேண்டுமானால் செல்ல வேண்டாம்; இடத்தைத் தெரிந்து கொள்வதால் என்ன தப்பிதம்?" என்று தீர்மானித்து இரண்டடி எடுத்து வைத்தான்.

அச் சமயம் அவனுடைய கலாசாலை மாணவன் ஒருவன் அங்கு விரைக்க விரைக்க ஓடி வந்து "சுகுமாரா! சுகுமாரா! காலை முதல் உன்னைத் தேடுகிறேன். எங்கே சென்று விட்டாய்? உனக்கு ஒரு அவசரத் தந்தி வந்திருக்கிறது. தந்திச் சேவகன் உன்னைத் தேடி யலைகின்றான். சீக்கிரம் வா." என்றான்.

தந்தி என்கிற பதத்தைக் கேட்டதும் எத்தகையோருக்கும் மனம் தவிக்குமல்லவா! சுகுமாரனும் திடுக்கிட்டு, "ஐயோ! என்ன

நமக்காக எழுத வேண்டுமென்ற எண்ண மில்லாதிருப்பினும் யாராவது சில விஷயங்களைப் பற்றித் தீவிரமாகப் பேசி ஒருவித உற்சாகத்தையுண்டு பண்ணிவிடின் நம்மையுமறியாது மனத்தில் ஒரு சக்தி கிளம்பி பேனாவை விரட்டி யோட்டுகின்றது.

தந்தியோ! யார் அடித்துள்ளார்களோ! யாருக்கு என்ன பேரா பத்தோ!'' என்ற பெரிய வேதனை யடைந்தான். தன்னுடன் ஓர் அன்னியனிருப்பதால் தான் திலகவதியைப் பின்பற்றிச் செல்லு தல் கூடாது என்று எண்ணி விரைவாகத் தன்னிருப்பிடம் செல்ல லானுன்.

அங்கு வீதியில் தந்திச் சேவகன் தந்தியுடன் நின்று கொண் டிருந்தான். சுகுமாரன் தந்தியை வாங்கி உடைத்துப் படித்தான். அதில்,

"சுகுமாரா! உன்னருமை மாதவனுக்கு உடம்பு அதிகமா யிருக்கிறது. உடனே வந்தால் பார்க்கலாம்.

உன் தாயார்''

என்றிருந்ததைப் படிக்கும்போதே கண்ணீர் பெருகி விட்டது. அனியாயக் குற்றத்திற்குச் சிறைச்சாலையில் அல்லலுறும் தன் தமக்கையின் குமாரனிடம் சுகுமாரனுக்குப் பிராணப் பிரியமாத லால் அக் குழந்தையை உடனே காண ஆவல் தூண்டியது.

அந் நிமிடமே கலாசாலையில் ரஜா பெற்றுக் கொண்டு பிர யாணமாகிவிட்டான். அவனுடைய மனம் தத்தளிக்கின்றது. தன் தமக்கையின் உயிருக்கு ஒப்பாகிய இச் செல்வனை அவர்கள் வரும் வரையில் கண்ணில் வைத்துக் காப்பது போலக் காப்பாற்றித் தன் தமக்கை யிடத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்ற உறுதியுடன் வளர்க் கும் இக் குழந்தைக்கு ஒன்றுமில்லாதிருக்க வேண்டுமே! கடவுளே!'' என்று கண் கலங்கியவாறு ரயில் பிரயாணத்தைச் செய்து, மறு தினம் மதராஸை அடைந்தான். வெகு ஆவலோடு வீட்டிற்கு வந்து குழந்தையைப் பார்த்தான். குழந்தைக்கு அசாத்யமாய் ஜுரம் காய்கின்றது. கோமளவல்லியம்மாள் கண்ணீர் பெருக உட்கார்ந் திருக்கிருள். சுகுமாரனுக்கு குழந்தையினுடைய பரிதாபத்தைக்

உண்மையான ஸ்வாரஸ்யத்துடன் சங்கீதத்தைக் கேட்கவேண்டு மென்பவர்கள் ஒரு குண்டூசி கீழே விழுந்தாலும் அதன் ஓசை கேட்கும்படி யான அவ்வளவு நிச்சப்தத்துட னிருக்கமாட்டார்களா? பிரம்மானந்தமாகப் பாடுகையில் சிலர் ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு கலபை புண்

கண்டு சகிக்க முடியவில்லை. இந்த நிலைமையில் தன் தமக்கையையும் அவள் புருஷனையும் எண்ணி வருந்தித் தவிக்கின்றான்.

"ஹா! கடவுளே! என் சகோதரிக்கு விளைவித்த ஆபத்தெல்லாம் போதாதென்று இக் குழந்தையையும் நீயே அழைத்துக் கொண்டு விடுவாயோ! என்னப்பனே! இக் குழந்தைக்கு உயிர்ப் பிச்சை தரவேண்டும்; என் சகோதரியின் ஜீவியத்தில் இந்த ஒரு சந்தோஷத்தையாவது கொடுக்கலாகாதா! இவனுக்கு ஏதேனும் நேர்ந்துவிடின் நான் எவ்விதம் என் சகோதரியைப் பார்ப்பேன். சர்வேசா! தயாநிதே!'' என்று வேண்டுகின்றான். குழந்தைக்குப் பலமாக வந்து விட்டதால் குணமாவதற்குச் சில தினங்களாகி விட்டன. அந்த சில தினங்களும் அவன் மாதவனை விட்டு அகலாமல் அருகிலேயே இருந்து உபசரித்தான்.

அதே சமயத்தில் நர்மதாவிடமிருந்து கடிதம் வந்தது. அந்த ஜெயில் கடிதத்தின் முத்திரையும், காகிதமும் பார்க்கும் போதே நன்கு விளங்குமாதலால் அதைக் கண்டதும் கோமளவல்லியம்மாள் கண் கலங்கினாள். அக் கடிதத்தைச் சுகுமாரன் படிக்கலானான்.

"என்னருமைத் தாயே! வந்தனம்.

சில தினங்களாக எனக்கு துர்ச் சொப்பனங்களே வருகின்றன. அதன் காரணம் என்னாலேயே அறியக் கூடவில்லை. எனக்கு அது பெரிய திகிலாக விருக்கிறது. தம்பி சுகுமாரன் க்ஷேமமா? அவனிடமிருந்து கடிதம் கண்டு வெகு காலமாகி விட்டது. என் கடிதமெழுதவில்லை. என்னுடைய விதியை எண்ணி நான் எத்தனை திடமாக விருப்பினும் அக்ஞானமே மூடுகின்றது. மாதவன் சவுக்கியமா! உடம்பு ஒன்றுமில்லா திருக்கிறானா! அவனையும் சுகுமாரனையும் பார்க்கவேண்டுமென்ற

டாக்கி அதன் ரஸத்தை அனுபவிக்க விடாது செய்கின்றனர். இநம் படிக்குமிடத்தில் நாய்க்கென்ன வேலை என்கிறபடி பாட்டில் சிரத்தையில்லாதவர்கள் அங்கு எதற்குப் போகவேண்டுமோ தெரியவில்லை.

ஆவல் என்னைச் சில தினங்களாய் இரவும் பகலும் வதைக்கின்றது. அவ் விருவரையும் ஒரு முறை இங்கு வந்து விட்டுப் போகச் சொல். நீ வராதே. உனக்கு மனம் தாங்காத துக்கம் உண்டாகி விடுகின்றது. நான் கஷ்டப்படுவதாக நீ கனவிலும் நினைக்காதே! சுகுமாரனையும் மாதவனையும் கட்டாயம் அனுப்பு.

உனது அருமைச் செல்வி
நர்மதா''

சுகுமாரன் அதைப் படிக்கும்போதே கண்ணீர் பெருகத் துக்கம் தொண்டையை அடைக்கப் படித்தான். அந்தோ! அந் நிலைமையில் இருப்பவர்க்கன்றோ இந்த விசனம் தெரியும். சுகுமாரனுக்கு "இந்த மெலிந்த குழந்தையை எப்படிக் கொண்டு செல்கின்றது? இந்த சமயம் நாம் போகாவிட்டால் நர்மதா என்ன நினைப்பாளோ!'' என்ற பலவிதமான எண்ணங்கள் உண்டாகித் துக்கம் பொங்கியது. எதற்கும் தான் சென்று வருவதே நல்லதென்று தீர்மானித்தான். கோமளவல்லியம்மாளும் அதற்கு இசைந்தாள்.

சிறைச்சாலையிலுள்ள நர்மதாவின் ஜீவியத்தை நாம் கூற வேண்டுமா! அவள் தன் கணவனிடத்தில் கொண்ட பேரன்பினால் தானும் தன் கணவனைப் போலவே இருத்தல்தான் தருமம் என்று எண்ணி வேண்டுமென்றே தண்டனை யடைந்தாளாதலால் அந்த கஷ்டம் அவளுக்கு மிக்க சுகமாகவே தோன்றியது.

நர்மதா முதல் முதல் தண்டிக்கப்பட்டு ஷண்முகபுரியின் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்ட வுடன் சிறைச்சாலையின் உள்ளே ப்ரவேசித்துப் பார்த்ததும் அவளை யறியாத பேராச்சரியம் உண்டாகிவிட்டது. எல்லாக் கைதிகளுக்கும் வந்தவுடன் சிறைச்சாலையின் வழக்கப்படிக்கு வெள்ளைப் புடவை கொடுத்து முன்பு அவர்க

இக் காலத்தில் அனேகர் பல பாஷைகளிலிருந்தும் மொழி பெயர்த்துத் தமது சொந்தமானதென்று விளம்பரப் படுத்தி விடுவதால், யாராயினும் சிலர் வெகு கஷ்டப்பட்டுக் கற்பனையாக எழுதினாலும் அதையும் சந்தேகிக்கும்படியாய் விடுகின்றது.

ளணிந்திருந்த ஆடையாபரணங்களை வாங்கி வைத்துக் கொண்டு உள்ளே யனுப்புவார்கள். அங்கு ஒரு கைதி வரும் விஷயம் உள்ளே இருக்கும் மற்ற கைதிகளுக்குத் தெரிந்த உடனே எல்லோரும் கூட்டமாகக் கூடி புதிய விருந்தாளியை வரவேற்கக் காத்திருப்பார்கள்.

அக் கைதிகளுக்கு அவரவர்களின் குற்றத்திற்குத் தக்கபடி அடையாளங்கள் உண்டு. கொலை செய்துவிட்ட கைதிகளாயின் சிவப்புக் கரையுள்ள புடவை உடுத்தி யிருப்பார்கள். சாதாரண திருடிகளாயின் வெள்ளைப் புடவை உடுத்தி யிருப்பார்கள். சிறைச் சாலைதான் தமக்குச் சோறு போடும் சொர்க்கம், காப்பாற்றும் கைலாயம், பொழுது போக்கும் பிரம்மலோகம் என்று எண் ணிப் பிறந்தகத்திற்குப் பெண்கள் வருவதுபோல அடிக்கடி வரும் விசேஷ மதிப்புள்ள விருந்தாளிகளுக்கு கருப்புக்கரை போட்ட புடவை. இவ்விதமே ஆண் கைதிகளுக்கு அடையாளம் காண்பிக்க பலவிதமான குல்லாய்களைக் கொடுப்பது வழக்கம்.

தாங்கள் ஓர் பெரிய கொலையோ, களவோ செய்துவிட்டு வந் திருக்கிறோம் என்கிற விசனமே இல்லாமல் அனேக கைதிகள் அடாடா! என்ன சந்தோஷமாயும், இந்தப் பெரும் சுகப் பதவி தவம் செய்து தனக்குக் கிடைத்து விட்டது போலவும் எண்ணி அகமகிழ்ந்து, கூத்தாடுவதும், பாட்டுப் பாடுவதுமாக உலாவும் வேடிக்கையைப் பார்த்தால்தான் நன்கு அறியலாம்.

அவர்களிலும் உண்மையாகக் குற்றம் செய்யாமல் தலைவிதி யின் பயனால் அபாண்டமான பழிகளுக்கு இலக்காகி சதா கண்ணும் கண்ணீருமாய் தேகம் மெலிந்து வாடி வருந்துவோர் சிலர் உண்டு. அவர்களின் பரிதாபத்தைக் கண்டு சகிக்க வியலாது. தாம் வேண்டு மென்றே க்ஷாத்திரங் கொண்டு பகையாளிகளைக் கொன்றுவிட்ட

ஒருவரைக் கண்டு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டு மென்று புறப்படுகையில் அவரை நேரில் கண்டும் வேறு ஏதேதோ விஷ யங்களைப் பற்றிப் பேசிவிட்டு முதலில் நினைத்ததை அடியோடு மறந்து விடுகிறோம்.

சிலர், தாம் பெரிய கோட்டையை ஜெயித்த வீர அரசி போல மார் தட்டிப் பேசித் திரியும் காட்சியோர் வேடிக்கை.

இத்தகைய கைதிகளின் கூட்டத்தினர் ஒன்று கூடி நமது நர்மதையின் வரவை எதிர் பார்த்துக்கொண்டு நின்றூர்கள். நர்மதையோ, உயர் குலத்தில் பிறந்த உத்தமி. கல்வி, சங்கீதம் முதலிய வித்யாப்பியாசம் பெற்ற வனிதை, செல்வத்தில் திளைந்த சீமாட்டி, வருத்த மறியாத வனிதை, கஷ்டங்களைக் கனவிலும் கண்டறியாத காரிகை, பார புத்தி யுடைய பாவை யாதலால் இங்கு நிற்கும் இக் கூட்டத்தைப் பார்த்ததும் அவளுக்குப் பெரும் வியப்பும் திகைப்பும் உண்டாகி விட்டன.

இந்த ஏந்தெழில் மடந்தையின் சிங்கார வதனமும், இளமைப் பிராயத்தின் எழிலும், கல்வி யறிவின் பெருமையும் முகத்தில் ஜ்வலிக்கின்றன; இவளுடைய வனப்பு மற்ற கைதிகளுக்கு அபாரமான ஆச்சரியத்தை யுண்டாக்கி விட்டது. ஒருவரோடொருவர் குசு குசுவென்று பேச வாரம்பித்தார்கள்.

“பாக்கரத்துக்கு எத்தினி அழவாக்கிரா! நல்ல டாக்கு டீக்குன்னு நடக்கரா! சேஞ்ச வேலெயோ கொலெதாண்டி! அதோ பார் சோப்பு கரை பொடவெ கட்டிகிட்டு இருக்கரா! யாரெ கொண்ணுப்புட்டு இருப்பா! அவ கண்ணு முழிக்கிற முழியெ பாத்தியா! டே யப்பா! சொகுசுக்காரியாக்கிராளே!” என்று சிலர் பேசுகிறூர்கள்.

நர்மதையை அழைத்து வந்த மேட்ரன் இவளை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதுபோல அவர்கள் முன்பு விட்டு

ஒரே நாளில் எல்லோருக்கும் சஞ்சிகை யனுப்பியும் ஒரே இடத்திலுள்ளவர்களில் ஒருவருக்குச் சேர்ந்து மற்றவர்களுக்குச் சேராவிடில் அவர்கள் நாம் வேண்டுமென்று அனுப்பவில்லையென்று நினைத்து மனஸ்தாபப் படுகிறூர்கள். தபாலாபீஸ் பெருச்சாளிகளாலுண்டாகும் அனுகூலம் இதுதானு?

விட்டு "ஜாக்ரதை! ஜாக்ரதை! சண்டே கிண்டே போடப் போரீங்கோ!" என்று கூறிவிட்டுப் போய் விட்டாள்.

அங்கு விடப்பட்ட நர்மதாவுக்கோ, இந்த ஜனக் கூட்டத்தின் தோற்றம் வெகு அருவருப்பாக விருக்கின்றது. அவர்களின் ஆடையும், தேகமும், அழுக்கு படிந்துள்ள துர்க்கந்தமும் சகிக்கக் கூடவில்லை. குடலை குமட்டுகின்றது. ஒவ்வொருவரின் தலையிலும் பெரிய ஆடு மாடுகள் புகுந்து கொண்டிருப்பினும் தெரியாது; அத்தனை பறட்டையாக விருக்கின்றது.

நமது நர்மதை அங்கு நிற்கும் கைதிகளின் கூட்டத்தையும், வார்டர்களின் ஒய்யார நாட்டியத்தையும், ஜெயிலின் அமைப்பையும் ஒரு முறை உற்று சுற்றிப் பார்த்தாள்; அப்படியே நின்றாள். மற்ற கைதிகளில் சிலர் "வாடியம்மா! என் நிக்கறே! இதுதான் நம்ப ஆத்தா வூடாச்செ! நமக்கென்ன கொரச்சல்". என்று நர்மதையின் அழகிய கரத்தைப் பற்றி இழுத்தார்கள்.

நர்மதை கையை இழுத்துக்கொண்டு, அருவருப்பால் முகத்தைச் சுளித்துக் கொண்டு ஒரு புறமாக நின்றாள். இதற்குள் கிண்டல் பிடித்த கைதிகள், "ஐயோ! மூஞ்சி போர போக்கே பாத்தியா! என்ன அத்தினி அசங்கிதே யடியம்மா! கொலை பண்ணச்செ நல்லாந்தீச்சா! அடடா! ராசா மவடி இவ." என்று ஏளனம் செய்தார்கள்.

நர்மதையோ, எதற்கும் வாயைத் திறக்கவே இல்லை. புதிய இடத்தின் மாறுதலாலும் தன் பதியின் கஷ்டத்தை எண்ணியும் மௌன பிம்பமானாள். புதிதாக வரும் கைதிகளை சில தினங்கள் வரையில் தனிக் கொட்டகையில் (Quarantine) பூட்டி வைப்பது ஜெயில் வழக்கமாதலால் நமது நர்மதையையும் தனிக் கொட்டகையில் பூட்ட ஏற்பாடாய் விட்டது.

எதையும் மிதமாக உபயோகித்தால்தான் பலனுண்டாகின்றது. ஏதாவதொரு நாள் டீயைக் குடித்தால் தூக்கம் விழிக்க முடியும்; தினம் குடித்தால் மயக்கமே. பிறகு குடிப் பழக்கத்தினும் கேடானதே யாகும்.

அன்று நர்மதை சிறைக்குள் வரும்போதே மாலை சமீபிக்கும் நேரமாதலால் உடனே களியும், சோறும், குழம்பும், அந்தந்த முறைப்படிக்கு வந்து விட்டன. சோற்றுப்படி சிலருக்கு, களிப்படி சிலருக்கு என்று அவரவர்களின் தண்டனை காலத்திலேயே விதிப்பதுண்டு. அதுபோல நர்மதைக்கு சோற்றுப்படியே விதிக்கப்பட்டது.

நர்மதையின் புருஷனுக்கு களிப் படிதான் விதித்துள்ளது. அவன் களிதான் புசிக்கின்றான் என்பது எல்லோருக்கும் தெரியுமாதலால் நமது நர்மதை தனக்கும் களிப்படியே அனுமதிக்க வேண்டும் என்று மாற்றிக் கொண்டாள். அன்று மாலையில் பார்ப்பதற்கு வெறுப்பாயும், பயங்கரமாயும், கரேலென்று செங்கல் பாளம் போன்ற அளவுக்குக் களி மொத்தை யொன்றும், ஒரு குவளையில் தொவரக் கொட்டைக் குழம்பும் நர்மதைக்கு வந்தன. அவளுடைய விசாரணையின் தீர்ப்பு ஆகும் நாள் வரையில் அனேக பெரிய மனிதர்களின் சிபார்சினால் கூழு, களி, ஒன்றுமின்றி சாதமே சாப்பிட்டுக் கொண்டிருந்தமையினால் இந்தக் களியைப் பார்க்கவில்லை.

களி அவள் முன்பு பிரஸன்னமான உடனே அதை வெகு களிப்புடன் கையில் எடுத்துக் கொண்டாள். "இன்றல்லவோ என்னுடைய சபதம் ஈடேறியது! என் பிராண நாதர் புசிக்கும் உயரிய களி இதுவல்லவா! நாதா! இந்த களியைப் புசித்து கஷ்டத்தை யனுபவிக்க வேண்டுமென்பது மகா கொடிய பாபி என் பொருட்டாகத் தமக்கு ஏற்பட்டதல்லவா!......ஹா! சண்டாளா! உன்னைக் கடவுள் ஒரு சமயத்தில் விட்டாலும் மறு சமயம் உனக்குக் கூலி கொடாது போகமாட்டார். "தெய்வம் நின்று கொல்லும்" என்கிற வாக்கு பொய்க்குமா?

என் ப்ராணபதி! முதல் முதல் தாம் சிறைச்சாலையையும்

சங்கீதத்தை உண்மையாக அனுபவிப்பவர்கள் சற்று தூரத்திலிருந்தே கேட்கிறார்கள். மற்றும் சிலர், பாடுபவர்களைக் கவனிப்பதிலேயே தங்களது நாட்டத்தைச் செலுத்துகிறார்கள். இன்னும் சிலர், தங்களை மற்றவர்கள் கவனிக்க வேண்டுமென்று பாடகர் கிட்டப் போகிறார்கள்.

ஜெயில் உடையையும், இக் களியையும் பார்த்த போது என்ன பதறிக் கதறிப் புலம்பி யிருப்பீர்களோ! என்ன தவித்திருப்பீர்களோ! என்ன விதமான கஷ்டப் பட்டீர்களோ! அடியாள் அதை நினைத்து ஏங்கிய நாட்கள் கழிந்து, தமது நிலைமையை யானும் கைப்பற்றும் நாள்—சுப நாள், நல்ல சந்தோஷ நாள்—இன்றே எனக்குக் கிடைத்தது.'' என்று பழங் கதைகளை எண்ணி, மனம் தவித்துக் கண்ணீர் பெருக்கியவாறு அக் களியை விண்டு ஆவலுடன் புசிக்கலானாள்.

அவளுடைய பதிபக்தியின் வேகம் அக் களியில் சற்றும் அருவருப்பு இல்லாது புசிக்கச் செய்கின்றதெனினும் தான் இது பரியந்தம் கனவிலும் காணாத இக் களியின் அருசியும், புளித்த வாஸனையும் அவளை யறியாது குமட்டுகின்றது. வாந்திக்கு வருகின்றது. துக்கத்தினால் கண்ணீர் வழிகின்றது.

இந்த நிலைமையைக் கண்ட மற்ற கைதிகள் வெகு பரிகாஸமாக நகைத்துக் கொண்டே "இந்த மவராசி யம்மாளுக்கு இந்த அம்ருத மொத்தே பிடிக்கிலேயாங் காட்டியம். ஏண்டியம்மா! களி துண்ண அழுவுரையா! ஐயோ! கொலை பண்ணச் செலெ நல்ல பாயசம், போளி, ஆமவடை, கிச்சடி அல்லாம் ஆம்பிடும். நல்லா துண்ணலா மிண்ணு பாத்தியா! கொலை தித்திப்பா இந்திச்சா! களி துண்ண அப்போம்பிடிச்சி இல்லாத ரோஜனெ பண்ரீயே! துண்ணுடீ! லாக்கப்புக்கு நேரமாப் பூட்டுது. சிங்கினதக்காரியாக்கிரே!'' என்றாள் ஒருத்தி.

மற்றொருத்தி—ஐயோ! பலே கைகாரிதான். களி துண்ண அழுவெதான். பல்லாக்கு மேலே சத்திகிட்டும், பாலுஞ் சோறும் திண்ணுகிட்டும், பஞ்சணேலே படுத்துகிட்டும் கெடந்த ராசாத்தி

எந்தெந்த சமயத்தில் என்னென்ன ராகம் பாடவேண்டுமென்பதை யறியாதவர்கள், தாங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்று நினைத்து ஏதாவதொரு ராகத்தைப் பாடும்படிச் சொல்கிறார்கள். சில சமயங்களில் அது ஏற்கெனவே பாடிய ராகமாக இருக்கிறது. அக் ஞானத்தை மூடி வைத்திருந்தால் கௌரவமல்லவா?

கொலெ ஏண்டீ சேஞ்சே! ஐயோ! ஐயோ! அடேயப்பா! வாங் திக்கு வரத்தே பாரு.

வேருருத்தி:—ஏண்டீயம்மா! நீ இப்போ செயில்லேக் கிரையா! ஊட்டே ஜோக்காக்கிரையா! துண்ணுடீ! இண்ணெக்கே களி துண்ண அயுதா ஒண்ணுடெ ஆயிசுக்கும் துண்ணணமெ; ஏண்டீயம்மா முயிக்கரெ! இனிமேலே களிதான் கதி. தெரியுமா?

பின்னொருத்தி:—இல்லேடீ! இவ ராசாவூட்டு மவன்னுட்டு லட்டு, பூரி, ஜிலேபி எல்லா வரும் இண்ணுட்டு இந்த ஜால வித்தெ காட்ராபேலெகீது. ஏண்டீ தொரசானியம்மா! ஊட்டெ இருந்து சோறு வருமிண்ணு பாத்தியா?

இன்னொருத்தி:—பலே கதைகாரியாக் கிராளே! இப்பிடி அயுதா சோறும் கறியும் ஆப்பிடும் இண்ணு பாக்ராப்பேலெக்கீது. தே! இது பாரு! அந்த சவால் இங்கே இல்லெ! அது சாயாது. இந்த களித்தான். காலேயிலெ கூயுத்தான். கொயம்புத்தான். வேறு சமா சாரங் கெடையாது. மரியாதையா துண்ணுபுட்டு படுத்துக்கோ.

என்றெல்லாம் பரிகாஸமாயும், குற்றலாயும், கொழுப்பாயும் பேசுகின்ற ஒவ்வொரு பதமும் நர்மதையின் வெறுப்பை அதிக முறச் செய்தது. அவளுடைய உள் நிலேமையைக் கடவுள் ஒருவரே அறிவார்; ஆதலால் அவள் யாருக்கும் பதிலே பேசவில்லே. தலே குனிந்தபடி அக் களியை இரண்டு வாய் புசித்துப் பின் மிகுதியைப் போட்டுவிட்டுக் கையலம்பிக் கொண்டு தனித்து ஓர் இடத்தில் அமர்ந்தாள்.

மேற்குறித்த கைதிகள் அங்கும் சென்று சுற்றிக்கொண்டார்கள். இதற்குள் லாக்கப்புக்கு நேரமானதால் எல்லோரையும் உள்ளே தள்ளிப் பூட்டிவிட்டார்கள். நர்மதையைத் தனிக் கொட்

பல வருஷங்களாக ஜெயிலிலேயே காலத்தைக் கடத்தியவர்களுக்கு விடுதலேயாகி வெளியே வரினும் சுயேச்சையாக இருக்க அதிக கூச்சம்; பல காலமாக விளக்கெண்ணெய், மண்ணெண்ணெய் விளக்குகளிலேயே படித்தும், எழுதியும் உலாவியவர்களுக்கு மின்சார விளக்கின் கீழ் நட

டகையில் போட்டுப் பூட்டினார்கள். அவ்விதம் செய்ததே அவளுக்குப் பேரானந்தமாகத் தோன்றியது. தனிக் கொட்டகையில் படுத்தவாறு தனது ஆதி கதைகளையும், தன் காதலனின் கதியையும் எண்ணி எண்ணி நித்திரையே கொள்ளாது புரண்டு புரண்டு கிடக்கிறாள்.

பக்கத்து அறைகளில் இருக்கும் கைதிகள் பேசுவதும், பாடுவதும், சிரிப்பதும் நர்மதைக்குத் தாங்கவியலாத வெறுப்பும் ஆச்சரியமுமா யிருக்கின்றது. ஒவ்வொருத்தியும் தான் செய்த களவு, கொலை முதலிய விஷயங்களை எல்லாம் வெகு பெருமையாயும், புகழ்ச்சியாயும் சொல்லிக் கொண்டு வம்பு பேசுகிறாள். ஒவ்வொருத்தியும் பேசும் வார்த்தைகள் நர்மதையின் வியப்பைக் கிளறுகின்றன. "ஆகா! உலகத்தில் இவ்வித அஞ்சா நெஞ்சையுடைய ஸ்திரீகளும் உண்டா!......இருக்கின்றார்கள். கொலை செய்ததாயும், களவு புரிந்ததாயும் நாம் எத்தனையோ புத்தகங்களில் படித்திருக்கிறோமேயன்றி உண்மை என்று அக்காலத்தில் நம்பவில்லையே! ஐயோ! இத்தகைய கொலைகளைச் செய்தவர்கள் ஸ்திரீகளா! அன்றிப் பேய்களா!

பண விஷயமான பகைமையினால் காயும் எண்ணெயைச் சிறு குழந்தையின்மீது ஊற்றிக் கொன்றுவிட்டதைப் பெருமையாகக் கூறுகின்றாளே! ஐயையோ! கேட்கும்போதே உடல் நடுங்குகின்றதே! க்ஷாத்திரத்தினால் அவர்களின் சிறு குழந்தையை, பால் மணம் மாறாத பாலகனை, கேவலம் சிசுவைக் கொன்றுவிட்டதால் இப்படுபாவி அடைந்த லாபம்தான் என்னே! ஆகா! கடவுளே! பெண்களின் உருவத்தைக் கொடுத்துப் பேயின் குணத்தை யமைப்பது உன் லீலாவினோதத்தின் அழகா! என்ன அனியாயம்." என்று எண்ணி வியப்புற்று இரவைக் கடத்தினாள்.

மாடக் கூச்சம்; சூரியனும் வாயு பகவானும் நுழைய முடியாத வீட்டிலிருந்தவர்களுக்கு அவர்களிருவரும் தமது முழு பராக்கிரமத்தையும் காட்டுகையில் கூச்சம்.

மறுதினம் முதல் தன்னை வலுவில் இழுத்துப் பேச வந்தாலும் அக் கைதிகளிடத்தில் வீண் வார்த்தையாட நர்மதை சற்றும் இணங்கவில்லை. அவளை அதற்காகப் பரிகஸிப்பதும் மட்டன்று. 'நர்மதா நன்கு படித்துள்ளவள், பெரிய விடத்துப் பெண்.' என்று அவளுடைய ஜட்ஜ்மெண்டில் தெரிவித்திருப்பதால் அவளை ஜெயில் அதிகாரிகள் அந்த ஜெயிலில் உள்ள பள்ளிக்கூடத்து வாத்தியா ராகப் போட ஏற்பாடு செய்து, இந்த விஷயத்தை நர்மதையிடம் தெரிவித்தார்கள்.

இது கேட்ட நர்மதா, தன் கணவன் மூட்டை தூக்கியும், விறகு வெட்டியும், கல்லுடைத்தும், வண்டி இழுத்தும், செக்கு இழுத்தும், மாவு அரைத்தும், கடினமான வேலைகளைச் செய்கை யில் தான் சுகரூபியாய் பள்ளிக்கூடத்தில் இருக்க விரும்பவில்லை. ஆதலால் தனக்கு அவ்வேலை வேண்டாமென்றும், தான் மற்ற கைதி களைப் போல வேலை செய்வதாயும், அதுதான் தனக்குப் பிரியமென் றும் கூறிவிட்டாள்.

அதன் பிறகு தினந்தோறும் மூட்டை தூக்குவது, நோம்பு வது, தாத்துவது, மாவு அரைப்பது, குத்துவது, கல்லுடைப்பது, சாக்கடைத் தண்ணீரை வாரி இரைப்பது, கக்கூஸ் வேலை செய்வது, முதலிய வேலைகளில் சரியான பாகம் கிடைத்துவிட்டது. அவள் ஒவ் வொரு நாளும் கஷ்டமான வேலையைச் செய்கிறேமே என்பதையே மனத்தில் நினைக்கமாட்டாள். அச்சமயத்தில் எல்லாம் அவளுடைய புருஷனின் சாந்தமான முகம், அழகிய முகம் அவள் கண் முன்பு தோன்றி ஓர் நூதனமான தைரியத்தை அவளுக்கு அளிக்கும். அதுவே பேராநந்தமாயு மிருக்கும். முறத்தைக் கையிலெடுத்தும் அறியாத இவ்வனிதை மற்ற கைதிகளின் செய்கையைக் கண்டு கற்றுக்கொண்டாள். வீட்டில் ஒரு செம்பு தண்ணீர் எடுத்து அறி யாத தருணீமணி தினந்தோறும் காலையில் ஓர் பெரிய முடாவினல்

காலத்திற் கேற்ற கோலம் என்கிறபடி இக் காலத்தில் எல்லாம் மாறிவிடுகின்றன. நன்றி மறப்பது நன்றன்று என்று பெரியார் எழுதிய தையும் மாற்றி உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கிறார்கள் சிலர்.

கண்ட அசுத்தமான தண்ணீர்கள் ஓடும் சாக்கடைத் தண்ணீரை எடுத்து புல் தரைகளுக்குக் கொட்டுவாள்.

சாக்கடையானது கீழே இறங்கினல் மூன்றடி ஆழமிருக்கிறது; அந்த ஆழத்தில் இறங்கி சற்றும் அசங்கியமின்றி, எத்தனை பேர் காரியுமிழ்ந்திருப்பார்களோ! எத்தனைபேர்களின் மூத்திரமோ! எத்தனைபேர் குளித்த அழுக்குத் தண்ணீரோ! எத்தனை பேர் கால் கழுவிய அசுசியான தண்ணீரோ!—இவைகளை மொண்டு கொட்டும்போதும் நர்மதா முகத்தைச் சுளித்துக் கொள்ள மாட்டாள்.

போஜனம் செய்த பின்னர் சற்று நேரமும் உட்காராமல் தன்னுடைய வேலையைக் கவனிப்பதிலேயே கண்ணுக விருப்பாள். வாரத்திற்கு ஒரு முறையான ஞாயிற்றுக்கிழமை மட்டும் இவர்களுக்கு வேறு வேலை கிடையாது. எனினும் காலை ஆகாரம் முடிந்த உடனே ஜெயில் பூராவும் ஒரு இடமின்றி நன்ருக ஒட்டடை படித்துப் பெருக்கி சுத்தமாகக் கழுவித் தள்ளவேண்டும். இவ் வேலை முடிந்ததும் அன்று முற்றும் லாக்கப்புதான். சாப்பாட்டு நேரத்தில் மட்டும் வெளியில் விடுவது; மற்ற நேரத்தில் அவர்களுக்கு தேகபாதை நிவர்த்திகூட அந்த கொட்டகைக் குள்ளேயே தான் நடைபெறவேண்டும். ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு இரும்புத் தொட்டியுடன் உள்ளே கிடக்க வேண்டும்.

அந்த நாட்களில் அவர்களது கொம்மாளத்தைப் பற்றி வரைவது சாத்தியமன்று. சுமார் 30—40 பேர்களை ஓர் பெரிய கொட்டகையில் போட்டுப் பூட்டிவிடுவார்கள். அந்த கொட்டகையில் திண்ணைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று இருக்கும்.

முன் காலத்தில் பொய் யுரைப்பவர்களுக்குத் தண்டனை விதித்ததாகச் சொல்வார்கள். ஆனல் இக் காலத்தில் பொய் சொல்லாவிடில் ஒரு நாள் கூடக் காலங் கழிக்க முடியாதுபோ லிருக்கிறது. பரிசுத்தமான நெய்யின் வாசனையைக் காண்பது எவ்வளவு அருமையாக இருக்கிறதோ, அம் மாதிரியே மெய்யின் கதியு மிருக்கின்றது.

அதில் உட்கார்ந்து வம்பு பேச வாரம்பித்து விட்டால் ஓய்வதே அரிது.

நர்மதாவுக்கு முதலில் சில தினங்கள் இருந்த ஒண்டிக் கொட்டகையே வெகு ஆநந்தமா யிருந்தது. பிறகு எல்லோரையும் ஒன்ருகச் சேர்த்துவிட்ட பின்னர் இவளுடைய பாடு மிக்க திண் டாட்டமாகி விட்டது. ஒருவருடனும் பேசாமலிருந்தாலும் வம் புக்கு வலிய இழுக்கின்ருர்கள். அதற்கும் இணங்கவில்லையெனில் பரிகஸிப்பது. இவ்விதமான பாதையைச் சகிக்காது தவிப்பாள்.

அங்கு பேசும் சத்காலக்ஷேபத்தின் சாராம்சமோ கேட்கவே வேண்டாம். திருடிகள் ஒருத்திக்கு ஒருத்தி உளவு பேசுவதும், தந்திரங்கள் கற்றுக் கொடுப்பதும், "நாம் வெளியில் சென்ற பிறகு இருவரும் சேர்ந்து இப்படிச் செய்யலாம்" என்று ஆலோசனை சொல்வதும் நர்மதையின் காதில் நாராசம்போல் படும். இதை விட ஆபாசமான எழுதத் தகாத பேச்சுக்களும், செய்கைகளும் நர்மதையின் மனத்தைப் பிளக்கும். "சிவ, சிவா! ராம, ராமா!" என்று சிந்திப்பாள்.

இத்தகைய அறிவிலிகளின் கூட்டத்திற்கு நற்புத்தி வரும் வண்ணம் நல்ல சரித்திரக் கதைகள், உயர்ந்த நாவல் கதைகள், முதலியவற்றைக் கூறி புத்தி வரச் செய்யலாம் என்று நர்மதை நினைத்து அவர்களோடு சம்பாஷித்து இத்தகைய நற்சரிதையை ஆரம்பம் செய்தால் அதை ஆமோதித்து ஆவலோடு கேட்பவர்கள் ஒரு சிலரே யாவர்.

மற்றையோர்கள் பரிகஸித்து "ஏண்டீ! பலே வேதாந்தம் படிக்கிருயே! இந்த கதை எல்லாம் தெரியாத, படிப்பு தெரியாத. மூடங்க நாங்கதான் இப்பிடி சேஞ்சிட்டு வந்துட்டோம். நீ நல்ல

கடிதம் வந்த வுடனே பதிலெழுத வேண்டுமென்று ஆரம்பித்தும் அது முடியாமல் தாமதமாகின்றது. சில சமயங்களில் எழுதி முடித்தும் ஏதாவது அசந்தர்ப்பத்தால் அதைத் தபாலுக்கு அனுப்ப நேரமாய் விடு கின்றது. இது எல்லாவற்றையும் விட வேடிக்கையானது கடிதத்தை

கதெ படிக்கிரெ! பாட்டு சொல்ரெ! நல்ல ரோஜனைக்காரியாக்கீரே! எல்லாங்கிதே! ஏண்டீ கொலெ பண்ணினே! வேதாந்தம் கொலே பண்ணச் சொல்லித்தா! போடீ போ! இந்த வீண் கதெ யாருக்கு ஒணம்? நீ யாரெ கொலே பண்ணெ! எப்படி பண்ணெ! ஒனக்கு ஆம்பிடியாங்கிரானு! யாரையாச்சும் இஸ்த்துகினு ஒடியாந்துபுட்டு அவன் ஒனக்கு சரியில்லாமெ கொண்ணுபுட்டெயா! இங்கெ வந்து இத்தினி நாளாச்சு. ஒங் கதையெ சொல்லல்லெ! இந்த கதை யாருக்கடி ஒணும்.'' என்று ஒரேயடியாகப் பேசிவிடுவார்கள். ஆதலால் சத் விஷயத்தில் பிரியப்பட்டவர்களுக்குத் தினம் கதை சொல்லிக் கொண்டு தன் காலத்தைக் கடத்தலானாள்.

இவ்விதமிருக்கும் நாளில்தான் முன்பு ஒரு தினம் கோமளவல்லி வந்து பார்த்தது. பிறகு பல மாதங்களாக வரவில்லையாதலால் பெற்ற மனம் பித்து என்கிற பழமொழிப்படிக்கு அவளுடைய குழந்தை மாதவனின் நினைவு வந்துவிட்டது. தாய்மார்களின் கொலே, களவு முதலிய துஷ்க்ருத்யங்களின் பலனாக அவர்களின் சிறு குழந்தைகள் அந்த ஜெயிலில் படும் கண்ராவி எழுதத் திறமன்று. சுயேச்சையாக உண்டு, உலாவி, ஓடியாடும் பறவைகளைக் கூண்டில் அடைப்பதுபோல இக் குழந்தைகளை 6 வயதுமுதல் கர்ப்பத்திலுள்ள சிசுக்கள் வரையில் அங்கு காணலாம். இந்த களியும், சோறும், கூழும் தாயாருடன் பங்கு பெற்றுத் தின்றுகொண்டு சாக்கடைப் புழுவுக்குப் போக்கிட மில்லை என்கிற பழமொழிப்படிக்கு அந்த ஜெயிலுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கும் பரிபவம் ஓர் தனித்த கண்ராவி.

நல்லுணவா! நல்லாடையா! நற்சகவாஸமா! தனது சொந்த மனிதர்களின் செயற்கையா! ஒன்றுமற்ற அக்குழந்தைகளைப் பார்க்கும்போதெல்லாம் நர்மதையின் வயிறு எரியும். "பாவிகளாகிய தாயார் செய்த குற்றம் இச்சிசுக்களும் அனுபவிக்க நேர்ந்துவிட்

எழுதி, ஸ்டாம்பு ஒட்டி ஜேபிக்குள் வைத்துக் கொண்டும் தபாற் பெட்டியில் போட மறந்து விட்டுப் பிறகு சொக்காயை வண்ணானுக்குப் போடுகையில் அதைக் காண்பது.

டதே! வெளித் தோற்றம் இன்னதென்றறியாத இக் குழந்தைக ளின் பிற்கால கதி எவ்விதம் ஆகும்?'' என்று எண்ணி விசனமுறு வள். இத்தகைய எண்ணங்கள் அக்குழந்தைகளின் மாதாக்களுக்குச் சற்று மிருப்பதே இல்லை. குழந்தைகளும் தாமும் அவ்விதம் இருப் பதுதான் பெரிய சொர்க்கபோகம் என்று எண்ணி யிருக்கிறார்கள்.

ஐயோ! குழந்தைக்காரிகள் மட்டுமா! கர்ப்பிணிகளாக வந்து விடும் கைதிகள் எத்தனை பேர்கள்! ராம ராமா! சிறைச்சாலையில் பிறக்கும் அக்குழந்தை வெளி உலகம் இன்னதென்று அறியுமா! அதன் தாயார் தனது தண்டனை காலம் முழுவதையும் அனுபவித்து வெளியில் செல்லும் காலத்தில் அக்குழந்தைக்குத் தன் தாயாரின் திருட்டுக் குணமே நன்கு பழகுகின்றது. நல்ல பேச்சு, நல்ல மனி தர்கள், சத்சங்கம் முதலியன அதன் செவியில் படுவதற்கும் பிர மேயமில்லை. இந்தத் திருடிகளும், கொலை செய்தவர்களும் ஒன்று கூடிப் பேசுவதுமே அக்குழந்தையின் செவிகளுக்கு விருந்தாகின் றது. அத்தகைய விஷயமே அதன் மனத்தில் பதிந்துவிடுவதால் அந்த ஜெயிலுக்குள்ளேயே அக்குழந்தை திருடவாரம்பிக்கிறது.

தாயார் திருடிவிட்டு ஜெயிலுக்குள் வந்திருப்பதால் குழந்தை ஜெயிலுக்குள்ளேயே திருடிப் பழகிவிட்டால் அதற்கு வேறு ஜெயில் எது? ஜெயிலுக்குள் திருடுவதற்கு என்ன கிடைக்கும் என்று யோசிக்கலாம். சிறுவர்களுக்கென்றே ஜெயிலில் பாடசாலை இருக் கின்றது. அதற்குள் படிக்கும் பிள்ளைகளின் பலப்பம், சாக்பீஸ். இவைபோன்ற அல்ப வஸ்துக்களைத் திருடுவது. இதல்லாமல் அங்கு அரிசி நோம்புவது, பருப்பு நோம்புவது, கேழ்வரகு அரைப் பது இதுபோன்ற வேலைகளைத் தாயார் செய்கையில் 3 அல்லது 4. வயது குழந்தைகள் இந்த பண்டங்களைத் திருடி, கழுகுக்கு ஒப் பான பார்வையுடைய வார்டர்களுடைய கண்களிலும் படாது எங்

ஒரு புத்தகத்தைப் படிக்கையில் சில பக்கங்களை ஒரு நிமிஷத்தில் வாசித்தாய் விடுகின்றது. மற்றும் சில பக்கங்களை வாசிக்க வாசிக்க ஓடு வதே இல்லை. எழுதுபவர்களின் சாமர்த்தியத்துடன் வாசிப்பவர்களின் மனப்பான்மையுமே இதற்குக் காரணம்.

கேயோ பதுக்கிவிடுகின்றார்கள். அவர்களுக்கு ஒழிந்த நேரத்தில் இவைகளைப் பச்சையாகத் தின்கிறார்கள்.

தன் குழந்தை இத்தனை சாமர்த்தியமாகத் திருடிப் பதுக்கி விட்ட பெருமை தாயாருக்கு பெரிய அரசி பதவி வந்ததுபோலாய் விடுகின்றது. திருட சாமர்த்தியமில்லாத குழந்தையின் தாயை மேற் படி ஆசாமி பரிகஸித்துப் பேசுவாள். அந்தோ! இதன் பலன் தான் அனுபவிக்கையிலுங்கூடத் தெரியவில்லையே! "அடீ! எம்மவன், மவள் பெரியவங்களானல் நல்லா மெபாயச்சிக்கிவாங்க. சாமார்த்யக் காரர்களாவாங்கோ." என்று ஜம்பம் பேசி மார் தட்டுவார்கள்.

இன்னும் சில கிராதகிகள் தமது குழந்தைக்கென்று தர்மத் திற்குக் கொடுக்கப்படும் பாலைத் தாமே சற்றும் அஞ்சாது குடித்து விட்டு குழந்தையைப் பட்டினி போட்டுக் கொல்வார்கள். இதை யறிந்த பிறர் "ஏனடீ இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டால் "ஆமாம். அது உயிரோடிருந்து யாரைக் காப்பாத்தணும். செத்து தான் போவட்டமே! அதன் அப்பன் ஆயிசுக்கும் செயிலெலெ கடக்கரான்; நானும் அப்படியே; இது என்னத்துக்கு இருக்கணம்." என்று பெற்ற பாசம் சிறிதும் அற்றுக் கூறுகிறாள். பின்னும் சிலரோ, "நாம்தான் விதியின் பயனாக இவ்விதம் அவஸ்தைப் படுகி றோம். இக்குழந்தையாவது முன்னுக்கு வரட்டும்" என்று எண்ணி தனக்கு யாரேனும் சொந்தக்காரர்கள் இருந்தால் குழந்தை சற்று பெரியதாய்விட்ட உடனே அவர்களிடம் அனுப்பிவிடுகிறார்கள்.

மேற்குறித்த விஷயங்களை எல்லாம் கவனிக்க, கவனிக்க நர்ம தைக்கு உண்டாகும் ஆச்சரியத்திற்கும் துக்கத்திற்கும் எல்லையே இல்லை. எத்தனை விதமான தமாஷ் உண்டோ! அத்தனையும் பார்த்து மனிதர்களின் போக்கையும், உலகத் தன்மையையும் எண்ணி வியப் புறுவாள். திருடிகளும், கொலைக்காரிகளும் பேசுவதோ ஓர் பெரிய

தனக்கு ஜென்ம சத்ருவைப் போன்று பகைத்துவிட்ட மனிதரிடத் திலேயே சிலர் உதவியை நாடுகிறார்கள். அவர்களாக இல்லாவிடினும் பார்ப்போர் நகைக்காம லிருப்பார்களா? காரியத்தை உத்தேசித்து வெகு சாதுபோல நடிக்கவும் ஆரம்பிக்கின்றார்கள். முறிந்த கிளை ஒட்டுமா?

தமாஷ். திருடிவிட்டவளின் தண்டனை நாள் முடிந்து அவள் விடுதலையாகும் நாள் சமீபித்துவிட்டால் அவள் 20 வருடமுள்ள கொலைக்காரிகளை நோக்கி "அடீ! நானு நாளைக்கி விடுதலையாவப் போறேன் பாத்தியா! நீ தானே குந்திகினு கெடக்கப்போறே!" என்று ஜம்பமாகக் கூறி, நகைப்பாள்.

கொலைக்காரி:—போ! ஒம் பெருமை ஆரோடெ சொல்றெ! நான் வந்தப்பறம் ஒருதாம் வந்து போய் மறுபடி வந்துட்டே! இன்னும் எத்தினெ தரம் வரப்போறெயோ! போயேன். திருட்டு முண்டெங்களுக்கு வெக்கமா!

திருடி:—ஆ! என்ன சொன்னே! திருட்டுமுண்டெங்களா! ஓன்னெப்போலெ ஒரு உசிரெ கொலெ பண்ணிப்புட்டேனு! நீ தானே கொலெகாரி! நீ கெட்ட கேடுக்கு திருட்டு முண்டெங்கன்னு சொல்றே!

கொலை:—அதே! சீ! வாயெ மூட்டீ! எங் குடும்பத்லே எத்தினியோ கயிஷ்டமிருக்கும். எம்மக்களே, எம்மனுசாளே தானெ நான் கொண்ணேன்! ஒண்ணெப்போலெ ஊரு ஓடமையெ ஊராரு வவுறு எரியப் பத்து வெரலேயும் பதியவெச்சு திருடினேனு! ஊர் சொத்தைக் கொள்ளையடிக்கும் கள்ளிக்கு வாயாடீ! சீச்சீ போ!

திருடி:—சீ! கொலேகார நாயே! ஒரு உயிரை கொண்ணுப் புட்டு வெக்கமில்லாமெ ஜம்பம் வேறெ பேசராயா! ஏண்டீ! நானு திருடிபுட்ட பொருளெ சொந்தக்காரா சம்பாதிச்சா மறுபடியும் அத்தெ அடையலாம். சாமார்த்தியமுண்டு. நீ ஊருக்கு அனுப்பிட்ட உயிரெ திரியும் எப்படி பாக்ரதுடீ! ஒரு நாளைக்கி வயிறெரிஞ்சா மறு நாளைக்கு சம்பாதிக்கலாம். நீ சேஞ்ச வேலைக்கு விமோக்ஷணம் ஏதடீ! கயிதே! பேசாதே போடீ!

இத்தகைய புத்தி சாமார்த்தியமாய்ப் பேசும் வார்த்தைகளைக் கேட்டு நர்மதைக்கு நகைப்பே உண்டாகிவிடும். "இருவரும் செய்

"ரயிலுக்கு அவசரமாகப் போகிறூர்கள். நீங்கள் யாராவது ஒரு ஆள் வசம் புத்தகத்தை அனுப்பினுல் பணம் வாங்கித் தருகிறேன்; அல்லது நானே கொண்டு வந்து தருகிறேன்" என்று ஆளில்லாத சமயத்தில்

துள்ள வேலையின் பெருமையோ கூறத்திறமன்று. இதற்கு போட்டியும் புகழும் ஒரு கேடா! அட கடவுளே! என்ன மூளை இது!" என்று வருந்துவாள்.

நர்மதைக்குத் தன் புருஷனை எப்படியேனும் சந்திக்க வேண்டும், அல்லது அவருடைய விஷயமேனும் தெரியவேண்டும் என்று பேரவா உண்டாகியது. ஆனல் அது நிறைவேறக் கூடியதா! இல்லை. தன் மனத்துள்ளேயே அடக்கிக் கொண்டு கிடந்தாள். தன் கணவன் அதே ஊரிலிருக்கிருனு, வேறு ஊருக்கு மாற்றப்பட்டு விட்டானு என்பதும் தெரியாது. இதை யார் மூலம், எங்ஙனம் அறிவது என்ற கவலையுடன் வருந்திக் கொண்டிருந்தாள்.

ஒரு தினம் கேழ்வரகு, துவரை, புளி முதலிய மூட்டைகள் வந்தன. அவைகளை நோம்புவதற்குக் கொண்டு வந்து வழக்கம்போல நோம்பித் தாத்திப் பிறகு கோணியை உதறி அதில் கொட்டப் போகையில் நர்மதை ஒரு கோணியைக் கவனித்தாள். அவளே அதை உதறினுளாதலால், அதை நன்கு கவனிக்க இடமுண்டாயது. நர்மதை அதைப் பார்த்ததும் சற்று தியங்கி திடுக்கிட்டாள். நர்மதைக்கும் அவள் புருஷனுக்கும் ஒருவிதமான பாஷை தெரியும். அந்த பாஷையின் எழுத்துக்கள் அந்தக் கோணியின் மீது கரியினுல் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து திடுக்கிட்டாள்.

இந்த ரகஸியத்தைப் பிறர் அறியாதவாறு அக்கோணியைக் கீழே விரித்துவிட்டு, அதன் பக்கத்தில் புளியை வைத்து ஆய்ந்து வைப்பதுபோல நடித்து, அவ் வெழுத்துக்களைச் சுறுசுறுப்பாய்க் கூட்டிப் படித்துவிட்டாள். அதன் விவரமாவது:—

சொல்லி வாங்கிக் கொண்டு எட்டிப் பாராதிருப்பது ஒரு சாமர்த்தியம். இக் காலத்து மோசடிகளைப் பற்றித் தினம் பத்திரிகையில் படித்தும் இப்படி ஏமாறுவது ஒரு மூடத்தனமே.

வைத்த பண்டம் ஒரு துரும்பாயினும் அதை மறக்காமல் எடுத்துக் கொள்கிறுர்கள் சிலர். சிலர் எத்தனையோ அவசியமானதாயினும் மறதியால் வைத்தவிடம் தெரியாது விழித்து வேறு அதைப்போல வாங்கிய பிறகு முன் கெட்ட பொருள் கிடைக்கின்றது.

"என் கண்மணீ நர்மதா! உன் விஷயங்களை யறிந்து மிக வும் விசனப்படுகிறேன். நீ இங்குதா னிருக்கிருயா, வெளி யூருக்கு மாற்றப்பட்டு விட்டாயா! என்பது அறியாது இதுவரை தத்தளித்தேன். நேற்றுதான் நீ இங்கிருப்பதை யறிந்தேன். நான் கஷ்டப்படுவதுபோல நீயும் கஷ்டப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் உபாத்தியாயர் வேலையை மறுத்து விட்டதாக அறிகிறேன். கண்ணே! வேண்டாம்; நீ கஷ்டப்பட வேண்டாம். என்னுடைய படிப்பின் திறத்தையும், நன்மையையும் உத்தே சித்து என்னை ஜெயிலதிகாரி கைதிகளுக்கு மேல் பார்வை பார்க்கவும், ஆபீஸில் சில வேலைகளைச் செய்வதுமாக நியமித் திருப்பதால் நான் மூட்டை முதலியன தூக்கிக் கஷ்டப்பட வில்லை. நீயும் இதிலிருந்து வேறு வேலையில் விலகிக் கொள்ளு. கண்ணே! நீ கவலைப்படாதிருக்கவே இதை எழுதினேன். நீ படித்த வுடன் அழித்து விடு. இனி வரும் மூட்டைகளையும் கவ னித்துக் கொண்டிரு.

இங்ஙனம்
உன் காதலன்

அந்த விஷயத்தை மனத்தில் பதிந்து கொண்டு உடனே கோணி தண்ணீரில் விழுந்துவிட்ட பாவனையாக நடித்து அதை அழித்து விட்டாள். மேற்கண்ட விஷயத்தைப் படித்ததும் நர்ம தைக்குத் தானகவே கண்ணீர் மடமடவென்று வந்து விட்டது. வழக்கம்போல இவளை மற்ற கைதிகள் பரிகஸித்தார்கள். இந்த ரக ஸியம் பிறரறியாதவாறு செய்து விட்டாள்.

பின்னும் சில தினங்களில் நர்மதையை ஆஸ்பத்திரியில் நர்ஸ் வேலையில் அமர்த்தி விட்டார்கள். அதுமுதல் அவளுக்கு மூட்டை களை கவனிக்கக் கூடவில்லை. தன் குழந்தையைப் பார்க்க வேண்டு

சில குள்ளநரிகள் திருட்டுப் பார்வையும், ஜால வேஷமும் தாங்கி அப்படி யிப்படி பார்த்துக்கொண்டே உள்ளே நுழைகின்றார்கள். அத் தனை நடிப்பு ஏன்? தன் குற்றத்தை மறைத்து நல்லவர்கள் என்று பிறர் நினைப்பதற்குத்தான்... நல்ல மணத்தையும், தீய நாற்றத்தையும் மூடி வைக்க முடியுமா?

மென்கிற ஆவல் மனத்தில் மிருந்து விட்டதால் அதே பெருத்த ஏக்கம் பிடித்தது போலாய் விட்டது. துர்ச் சொப்பனங்கள் உண்டாக வாரம்பித்ததால் நாம் முன்பு குறித்தபடிக் கடிதம் எழுதினுள். கடிதம் எழுதிய நாள் முதலாக "பதில் வருமா! வருமா?" என்று தினே தினே எதிர் நோக்கி அலேவாள்.

ஒரு தினம் ஆஸ்பத்திரியில் இவள் வேலே செய்கையில் ஜெயில் ரைடர் வந்து "அம்மா! உன்னைப் பார்ப்பதற்கு யாரோ வந்திருக்கிருர்கள்; வா!" என்ருர். உடனே நர்மதை அளப்பரிய ஆநந்தத்துடன் ஓட்ட ஓட்டமாக ஓடி வந்தாள். தன்னருமைக் கண்மணி மாதவனைப் பார்க்கும் பேரவாவினுல் விழுந்தடித்துக் கொண்டு வந்து இவர்களுக்காக ஏற்பட்டுள்ள கூண்டிற்குள் நின்ருள். பிறகு வெளிக் கேட்டைத் திறந்து மனுதாரரை அழைத்து வந்தார்கள்.

ஆகா! நர்மதையின் ஆவலும், பதைப்பும் அரை நிமிடத்தில் மாய்ந்து விட்டனபோல இவள் எதிர்பார்த்ததற்கு நேர் விரோதமாய் இவளே இக் கதிக்கு இலக்காக்கிய சண்டாளன் ஒரு மாதிரியான அலக்ஷ்ய நகைப்புடன் பிரஸன்னமாவதைக் கண்டு திடுக்கிட்டு, வெறுப்புற்றுத் தடுமாறி நின்ருள்.

வந்த தடியன் "ஐயோ! நர்மதா! உன்னைப் பார்க்க வயிறெரிகின்றதே! அப்போதே நான் சொன்னதைக் கேட்டிருப்பின் இக் கதி நேர்ந்திருக்காதன்ருே?" என்று இன்னும் ஏதேதோ பேசுகிருன். நர்மதைக்கு அவனைப் பார்க்கவும், பேசவும் மனம் கூசுகின்றது. தன் வெட்கக்கேடான நிலேமையை வெளியிடவும் மனம் துணியவில்லே. ஆதலால் அவள் ஏதுமே பதில் பேசாது, ரைடரை நோக்கி "ஐயா! நான் இவரைப் பார்க்கவும், பேசவும் விரும்பவில்லே. ஆதலால் எனக்கு மனு (interview) வேண்டாம். நான் செல்கி

அகப்பட்ட வரையில் சுருட்டுவதிலேயே நோக்கம் கொண்டு சிலர் சட்டத்தையும், நியாயத்தையும் மீறி அட்டகாசம் செய்கிருர்கள். கடவுளின் ஆக்ஞை எதுவோ அவ்வாறல்லவா காரியம் சித்தியாகும்! வீண் துள்ளலினுல் பயன் உண்டா?

றேன்". என்று கூறிக்கொண்டே க்ஷணமும் நில்லாது உள்ளே போய்ப் படுத்து விட்டாள்.

இவ்விதம் நடக்கும் என்று வந்த மனிதன் எதிர்பார்க்க வில்லை. "அவள் கைதியல்லவா! கட்டுண்டு நின்று தன்னுடன் பேசு வாள்" என்று ஆவல்கொண்டு வந்தான். அதற்கு நேர்மாறாக நடந்துவிட்டதால் மிக்க அவமானமும், ஆத்திரமும் கொண்டு வெளியே போய் விட்டான். உள்ளே சென்ற நர்மதையின் விசனம் அதிகரித்து விட்டது. 'ஐயோ! இப் பாதகன், இன்னும் இவ்விடத் திலுமா துணிந்து வந்தான்! என்ன அக்ரமம்! என்ன கடின சித் தம்! என் கண்மணி மாதவனைப் பார்க்க எண்ணி ஆவலோடு சென்ற விடத்தில் எம ஸ்வரூபம்போல இப்பாதகன் வந்து நிற்க வேண் டுமா!" என்று கண்ணீர் விட்டுக் கதறுகிறாள்.

அன்றைய தினமே அச் சண்டாளன் சென்றுவிட்ட சில மணி நேரத்திற்கெல்லாம் நாம் முன்பு தெரிவித்தபடி நமது சுகுமா ரன், கோமளவல்லியம்மாள், மாதவன் ஆகிய மூவரும் தமது சொந்த மோட்டாரிலேயே வந்து சேர்ந்தார்கள்.

ஜெயிலதிகாரியிடம் நர்மதையைப் பார்க்கவேணுமென்று கேட்டதற்கு "அவர்களை இப்போதுதான் யாரோ பார்த்துச் சென் றார்கள். இனி மூன்று மாதத்திற்கு மனு கிடையாது" என்று அவர்கள் கண்டிப்பாகக் கூறி விட்டார்கள். இதைக் கேட்டதும் சுகுமாரனுக்கு இடி விழுந்ததுபோலாயிற்று. "நம்மைத் தவிர அவளைப் பார்ப்பதற்கு யார் வந்திருப்பார்கள்? ஐயோ! குழந்தை யைப் பார்க்க வேண்டுமென்று கண்ணீர் பெருகக் கடிதம் எழுதி யிருந்தாளே! பார்ப்பதற்குச் சித்தமாய் வருவோர் வேறு எந்த மனிதர்களும் இல்லையே! அவர்கள் யார் என்று அறிவது?" என்று சுகுமாரனும் கோமளவல்லியும் திகைத்து விட்டார்கள்.

நாம் அவசியமாய் ஒரு இடத்திற்குப்போகப் பிரயாணப்படும்போது அவர்களே நேரில் நம் வீட்டிற்கு வந்துவிட, நாம் அங்குதான் செல்லப் புறப்பட்டோம் என்று கூற, அவர்கள் அதை நம்பாது மறுக்கப் பிறகு தர்க்கம் நடக்க, அதன்மேல் நம்பக முண்டாகின்றது.

ஜெயில் அதிகாரியிடம் எத்தனை கெஞ்சியும், மன்றாடியும் அவர்கள் ஒரே கண்டிப்பாய் விடமுடியாதென்று மறுத்துக் கூறி அலக்ஷ்யமாகவே சென்று விட்டார்கள். அந்தோ! ஜெயில் வாசலில் பரிதவிக்கும் இவர்களின் மன நிலைமையைக் கூறவேண்டுமா?'' "மாதவனின் தந்தையையாவது பார்க்கலாம்'' என்று எண்ணி அங்கு சென்றார்கள்.

இவர்கள் வருவார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை யாதலால் இரண்டு தினங்களுக்கு முன்பே கடிதம் வாங்கி எழுதிவிட்டான். அவனுக்கும் மனு கொடுக்க முடியாதென்று மறுத்து விட்டார்கள். அடாடா! இரு இடங்களிலும் இவ்விதமாகவா நேரவேண்டும். வந்தவர்கள் யாராக விருக்கலாம் என்றறிய மார்க்கமே இல்லையே! ஜெயிலில் உள்ள வேலைக்காரர்கள் கூட சரியாகப் பேசாது புறக்கணிக்கின்றார்களே! என்ன கொடுமை!'' என்று கண்ணீர் வழிய வீட்டுக்குத் திரும்பினார்கள். ஜெயிலுக்குள் அடைபட்டுக் கிடக்கும் உத்தமியான நர்மதைக்கு இவர்கள் வந்து சென்ற விவரமே தெரியவராது. அவள் தாங்கவியலாத துயரத்துடன் தலைவிதியைத் துலைக்கலானாள்.

சுகுமாரனின் லீவு முடிந்துவிட்டதால் மீண்டும் பம்பாயை அடைந்தான். முன்னர் திலகவதியை விட்டுச் சென்ற பிறகு இடையில் 15 நாட்கள் கழிந்துவிட்டன. சுகுமாரனுக்குள்ள விசனத்திலும் திலகவதியின் பிம்பம் மறையவில்லை; சதா தோன்றிக் கொண்டேதானிருந்தது. இருப்பிடமே அறியாத கன்னிகையைப் பற்றிக் கவலைகொண்டு பயன் யாது? அவ்வனிதை இருக்கும் இடமறியாது போய்விட்டோமே! அவள் தான் வசிப்பது வீடல்ல; துஷ்ட மிருகங்கள் வசிக்கும் காடு என்று கூறியிருக்கின்றாளே! அங்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற எண்ணமே மனத்தில் பாதிக்கின்றது. அன்று திலகவதி இறங்கிச்

சில தபால்காரர்கள், மணியார்டர் கொடுப்பது சொல்பமாயினும், அதை யோர் பெருமையாக எண்ணி "நான் தினம் 2 ரூபாய் மணியார்டர் தருகிறேனே'' என்று பலரிடமும் தமுக்கு தட்டுகிறார்கள்.

சென்ற வீதியில் சென்று, வழிப்போக்கன் போலத் திரிந்த வண்ணம் பலதரம் எந்த வீடாக விருக்கும் என்று கவனித்தான். ஒன்றும் பயன் கிடைக்கவில்லை.

பிறகு அவள் படிக்கும் கலாசாலை நினைவிற்கு வந்தது. அந்த பாடசாலை பெண்களுக்கு மட்டும் ஏற்பட்டுள்ளது; அதில் சில கோஷா ஸ்திரீகளும் படிக்கின்றார்கள். ஆதலால் அவ்விடம் செல்வது இயலாத காரியமாயிற்றே என்று வருந்தினன். பம்பாய் நகரத்தில் எத்தனையோ வீதிகளும், வீடுகளும் இருக்கின்றன. அவள் எங்கு கிடைப்பாள் என்று தேடுவது. பாடசாலையின் வாசலில் சென்று பார்ப்பதும், மனத்திற்குள் விசனிப்பதுமாகவே இருந்தான்.

இப்படி யிருக்க ஒருநாள் சுகுமாரனுடைய சிநேகிதர்கள் இருவர் வெகு பரபரப்புடன் அவனது அறையில் நுழைந்து "சுகுமாரா! இதோ! இப்படி ஜன்னலருகில் வந்து பார்." என்று ஆத்திரத்துடன் கூறினர்கள். சுகுமாரனுக்கு விஷயம் இன்னதென்று விளங்கவில்லை. விரைந்து எழுந்து ஜன்னலருகில் பார்த்தான். ஒன்றும் தெரியவில்லை. "நாராயணசாமீ! என்ன விஷயம் எனக்கு விளங்கச் சொல்லு." என்றான்.

நாராய:—சுகுமாரா! அதோ நான்கு பேர்கள் நிற்கின்றார்களே! அவர்கள் யார் என்று உனக்குத் தெரியுமா! கவனித்துப் பார்.

சுகுமார:—அவர்களை எனக்குத் தெரியாதே! அவர்கள் யாரோ அக்கடையில் வியாபாரம் செய்கிறார்கள் போலத் தோன்றுகின்றதே? ஏன் எதற்காகக் கேட்கிறாய்?

நாராய:—நாங்களும் முதலில் அப்படித்தான் நினைத்தோம். அந்த நால்வரும் உடை மாறிய போலீஸ்காரர்கள்—ஸி. ஐ. டிகள்—

சில வீட்டில் நடக்கும் விவாகங்கள் அண்டை அயல்களுக்கும் தெரிவதில்லை. அத்தனை ரகஸியமாய்—சிக்கனமாய்—நடத்தி விடுகிறார்கள். சில டம்பக்காரர்களோ, கடன் வாங்கியேனும் தடபுடல் செய்கிறார்கள். இதில் யார் சமர்த்தர்?

என்பதை இப்போதே அறிந்தோம். அவர்கள் சில தினங்களாக நம்மை எல்லாம் எந்த காரணம் பற்றியோ சந்தேகங் கொண்டு கவனித்து வருகிறார்களாம். இன்றே விவரமறிந்தோம். உடனே உன்னிடம் கூற வந்தோம். இப்போது நாம் என்ன செய்வது? எதற்காக நம்மை (Watch) கவனிக்கவேண்டும். அவர்களின் பேச்சை நான் சற்று மறைந்து நின்று கவனித்ததிலிருந்து நம் நால்வரையும் உடனே (அரெஸ்ட்டு) கைதியாக்கப் போவதாக அறிந்தேன். என் மனம் தத்தளிக்கின்றது. சுகுமாரா! இதற்கு என்ன வழி செய்வது? எந்த குற்றத்திற்காக நம்மை அரெஸ்ட்டு செய்யப்போகிறார்களோ தெரியவில்லையே!—என்று நடுங்கினான்.

இது கேட்ட சுகுமாரனுக்கும் ஒன்றும் விளங்கவில்லை. திடீரென்று தன்னைக் கைதியாக்கப் போவதாகக் கேட்டதும் தன் தமக்கையின் பூர்வ விஷயங்கள் யாவும் நினைவிற்கு வந்து சலனப் படக் காட்சி போலச் சுழலவாரம்பித்தன. தேகம் பூராவும் குபீரென்று ஆவி கிளம்பி வெயர்வை வெள்ளம் போலப் பெருகி வழிகின்றது. அவர்களுக்குப் பதில் பேசுவதையும் மறந்து தத்தளித்தவாறு ஸ்தம்பம்போல நின்றான். இதற்குள் வீதியில் பேசிக்கொண்டிருந்தவர்களில் ஒருவன் வேகமாக எங்கேயோ ஓடினான். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் முன்பு நின்ற நால்வரும் போலீஸ் உடை யணிந்த இன்ஸ்பெக்டருடன் சுகுமாரன் முதலியோர் இருக்கும் அறையில் தடதடவென்று ப்ரவேசித்து அதிகார தொனியோடு பேசத் தொடங்கி "ராஜத்வேஷமான புரட்சி இயக்கத்தில் நீங்கள் சம்மந்தப்பட்டிருப்பதான சந்தேகத்தினால் சட்டப்படி உங்களைக் கைது செய்யப்போகிறோம். இதோ வாரண்டு!" என்று காட்டி நால்வரையும் உடனே கைது செய்தார்கள். அந்தோ! அவர்களின் நிலைமையை நாம் கூறவும் வேண்டுமா? அப்படியே இடிந்து கல்லாய்ச் சமைந்து விட்டார்கள்.

210039

ரிட்ரெஞ்சுமெண்டு எல்லா ஆபீஸ்களிலும் உண்டாகி ஏழைகள் வாயில் மண் விழுகின்றது. ஆனால் சோற்றுக்கில்லாத பரம ஏழைகளின் வீட்டில்கூட காப்பிக்கு ரிட்ரெஞ்சுமெண்டு என்ற சொல்லே காணவில்லை.

5-வது அதிகாரம்

பேயின் வசப்பட்ட சேயிழை

பாம்பின் வாயிலகப்பட்ட தேரைபோல அக் காலிக் கூட்டத்தின் மத்தியில் அகப்பட்ட நம் திலகவதிக்கு அச் சோதாவின் வாய் மொழி செவியில் தணலை அள்ளி அடைத்ததுபோலத் தோற்றியது. "ஐயோ! நமக்கு இன்று பேராபத்து நேர்ந்துவிடும்போ லிருக்கிறதே! இவ் வீட்டுக் காரர்கள் சென்றவிடம் அறியாமல் நாம் என்ன செய்வது? இக் காலிக் கூட்டங்களிடமிருந்து நாம் எங்ஙனம் தப்புவது?" என்று பலவிதமான குழப்பத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்.

அந்த வீட்டிற்குச் சமீபத்தில் வீடுகள் கிடையாது. 100 கஜ தூரத்தில் ஓர் பெரிய தோட்டமிருக்கின்றது. அத்தோட்டத்திற்கு அடுத்தாற்போல ஓர் பங்களா உண்டு. அத்தோட்டத்தில் தோட்டக்காரன் வேலை செய்யும் நேரம் தவிர மற்ற நேரம் தோட்டத்தைப் பூட்டிக்கொண்டு போய்விடுவான். வீட்டின் இந்தண்டை பக்கமுள்ள பூர்வீகமான சத்திரம் இடிந்துபோய் விட்டதால் மனிதர்களே கிடையாது. அங்கும் சில சோம்பேறிகள், கபட சாமியார்கள், கள்வர் முதலியோர் எப்போதேனும் தங்குவதுண்டு. இந்த விதமான உபத்திரவத்திற்காகவே அவ்வீட்டில் யாரும் குடி நிலைப்பதில்லை. அவ்வீட்டிற்கு வாடகையும் குறைவு. எதிர்வாடையில் 50 கஜ தூரத்திற் கொரு பங்களா உண்டு.

ஒருவரிடத்தில் இருந்த ப்ரீதி முற்றும் மாறி, உள்ளூர வயிற்றெரிச்சலோடு த்வேஷம் கொண்டு, தாறுமாறாகப் பேசித் துள்ளிக் குதித்து முற்றும் நன்றிகெட்டு "அந்த விஷப் பாம்பை நசுக்குவேன்; த்ரோகியை சந்தியில் நிற்க வைப்பேன்; அந்த சாமர்த்தியம் என் கையிலிருக்கிறது." என்றெல்லாம் முக்யமான மனிதர்களின் முன்னிலையிலேயே கூறிவிட்டுப்

திலகவதிக்கு திகில் மீறிவிட்டது. பகல்வேளை யாகையினல் அத்துஷ்டர்களிடமிருந்து தான் தப்புவதற்குப் பயமில்லை எனினும் அவர்கள் துராக்ருதமாய் தன்னைத் தீண்டிவிடின் என்ன செய்வ தென்று பயந்தவாறு நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள். காலை நேர மாகையினல் ஆங்காங்கு சிலர் வருவது தெரிந்தது. அவ்வமயம் "ஐயோ! காலிக் கூட்டங்கள்! காலிக் கூட்டங்கள்! வழி தடுக்கு கின்றார்களே! யாருமில்லையா! உதவிக்கு வாருங்களேன்." என்று பலத்த கூச்சலிட்டாள்.

காய்கரிகள் விற்றுக்கொண்டு வந்த ஒருத்தி இந்த கூச்சலைக் கேட்டு ஓடி வந்தாள். இக் காலிக் கூட்டங்கள் காய்கரிகளை வாரி கூடையோடு தெருவில் கொட்டி இறைத்துவிட்டு நகைத்தபடியே கிண்டலாகப் பேசினர்கள். அந்த கூடைக்காரி வாயிலும் வயிற்றி லும் அடித்துக்கொண்டு அலறி யழுதுக் கூச்சலிட்டாள். அப்போது தூரத்தில் இன்னும் யாரோ சிலர் வருவதைக் கண்ட காலிகள் அவ்விடமிருந்து மூலைக்கொருவராக ஓட்டம் பிடித்தார்கள்.

திலகவதி தன் பொருட்டு உதவிக்கு வந்த கூடைக் காரிக்கு பெருத்த நஷ்டம் உண்டாகி விட்டதை எண்ணி விசனித்த வாறு, "அம்மணீ! பாவி என்னல் தங்கள் கரிகாய்கள் போய்விட் டனவே! என்ன செய்வேன்? நானே பல விதத்திலும் பரம அனதை! எந்த விதமாக நான் இந்த நஷ்டத்திற்கு ஈடு செய்வேன்? அன்றாடும் பிழைக்கும் உங்கள் பிழைப்பில் நான் இன்று மண்ணைப் போட்டு விட்டேனே! தாயே! என்னை மன்னிக்க வேண்டும். நான் தாயற்ற அனதை! திக்கற்ற பரதேசி!' என்று அவளை விழுந்து வணங்கி பின் அந்த காய்கரிகளைப் பொறுக்க வாரம்பித்தாள்.

அந்த கூடைக்காரிக்கு கரிகாய்கள் போய்விட்ட வயிற்றெரிச் சல் ஒருபுறமிருப்பினும் திலகவதியின் கண்ணீர் வழிந்த மொழியும்

பிறகு யாரைத் திட்டினர்களோ அதே மனிதருக்கு "மரியாதை மிகுந்த அம்மா" என்று கடிதம் எழுதி மன்னிப்புக் கேட்பதாம். ஒரு காலத்தில் பெற்ற அன்னை; மற்றொரு காலத்தில் விஷப் பாம்பு; த்ரோகி. பின்னொரு காலத்தில் மீண்டும் அன்னையாம். இன்னும் போகப் போக புலி, சிம்மம் முதலியன ஆருமோ என்னவோ?

அவளது பரிதாபமான பார்வையும் கூடைக்காரியின் மனத்தை உருக்கின. அவள் அழுகையோடு அழுகையாய் சாக்கடையில் விழுந்துவிட்ட கரிகாய்களைத் தவிர மற்றதை எடுத்துக்கொண்டு கூடையில் வைத்தவாறு “அம்மா! நீ என்ன சேவே! ஒண்ணைப் பாத்தா பச்செ கிளியாட்டமாக்கிரே! அந்த காலி பசங்க ஒண்ணெ உட்டுட்டு போனுங்களே அது போரும். என் கரிகாய் போனு நாளெக்கி சம்பாதிக்கலாம். ஒன்னெ மோசம் பண்ணிப்புட்டா அதெ திருப்ப முடியுமா! அம்மா! ஒனக்கு வூடு எங்கே! நீ ஏன் இங்கே வந்தே! இந்த சோதாக் கூட்டங்கள் கண்ணில் நீ ஏன் பட்டே? நீ வருத்தப்படாதே! நான் நேத்திக்கு கொஞ்சம் மோசம் செய்து கொர்வப்பட்டேன். அதனுலே இண்ணக்கி இந்த பலன் கைமேலே கெடச்சிது. மோசம் செஞ்சா மாத்திரம் அவங்க கதி ஒடனே தெரிஞ்சூட்டுது பாத்தியா! நேத்து கிச்சிலிப்பழம் வித்தேன். டெஜன் ஒரு ரூபா மேனிகி பேசி ஒரு வூட்டே கொடுத்தேன். அவங்க 6 டஜன் வாங்கிகிட்டு 10 ரூபா நோட்டு கொடுத்து மீதி பணம் கேட்டாங்க. ரொம்ப நாளா எங்கிட்டே செல்லாது கெடந்த ரெண்டு ரூபாவெ அவங்களுக்கு சேத்து கொடுத்துப்பிட்டு ஓடிபூட்டேன். அதான் இண்ணிக்கி 4 ரூபா கரிகாய் பூட்டுது. இனிமே புத்தி, புத்தி, புத்தி, கடவுளே! இனிமேல் மோசம் செய்ய மாட்டேன்” என்று கூறிக் கன்னத்தில் பளீர் பளீர் என்று அரைந்துகொண்டு “அம்மா! நீ கவலைப்படாதே. ஓம்மேலே தப்பு இல்லே. ஒங்க வூடு எங்கே இருக்குது சொல்லு. அங்கே ஒண்ணெ இட்டுக்கினு போய் உட்டுட்டு வறேன்.” என்ருள்.

இதற்குத் திலகவதி என்ன பதில் சொல்வாள் பாவம். தன்னுடைய நிலைமையைக் கூறுவதே நலமென்று தோன்றியதால் அவளை நோக்கி “அம்மணீ! என் கதையைக் கூறினுல் கல்லும் கரையும். என்னை ஆதரித்து வருபவர்கள் இவ்வீட்டில்தா னிருந்தார்கள்.

“என்னுயிரை விடினும் விடுவேன். என்னைக் கலைக்க முயலும் மித்திர சத்ருக்களை விட்டாலும் விடுவேன். என்னைத் தாய்போன்று எடுத்து வளர்த்த மன்னியையும், அண்ணுவையும் இஜ் ஜென்மத்தில் விடமாட்டேன்” என்று பலர் முன்பு மார்தட்டி, ஆவேசத்துடன் கூறிய நாக்கே

எனக்கு சில தினங்களாக தேக அசுகமா யிருந்தமையினல் ஆஸ்பத்திரியில் கிடந்து இன்றுதான் நேரே வீட்டுக்கு வருகிறேன். எனக்கு இவ்வீட்டில் இவர்கள் இல்லை என்பது தெரியாது. நான் எங்கு சென்று தேடுவேன்? தாயே! எனக்கொன்றும் தோன்றவில்லையே'' என்று வருத்தமுற்றவாறு கூறினள்.

கூடைக்காரி:—அம்மா! அவங்க போகச்செல ஓங்கிட்ட சொல்லாதெயா பூட்டாங்க? எனக்கு இந்த மீதி காயாவது விக்க னும்; நான் போறேன். நீ இந்த ஊட்டெ இருந்தவண்றியே! அக்கம் பக்கம் விசாரிச்சுப் பாரு. என் வவுத்து பொயப்பு இது.'' என்று கூறிக்கொண்டே போய்விட்டாள்.

திலகவதி அவ் வீட்டில் சில காலமாக இருக்கிறுள் என்று பெயரேயன்றி அவள் அக்கம் பக்கத்தில் யாரிருக்கிறுர்கள் என்பதை இதுபரியந்தம் அறியமாட்டாள். திடீரென்று சென்று கேட்டால் என்ன நினைப்பார்களோ! "வீட்டிலேயே இருக்கும் பெண்ணிடம் இடத்தின் மாறுதலைக்கூட கூருமல் செல்வார்களா! இவள் எங்கு போய் விட்டாளோ?'' என்று தன்மீதே தப்பிதமான அபிப்பிராயம் பட்டு விடுவார்களோ! என அஞ்சினள். "எதற்கும் நாம் நடு வீதியில் நின்று தியங்குவது சரியில்லை. அடுத்த பங்களாவில் சென்று கேட்டுப் பார்ப்போம்'' என்று அங்கு மெல்ல சென்ருள்.

அவ் வீட்டில் "இப்போதுதான் சாப்பாட்டு நேரம்; ஆதலால் ஒருவரும் வெளிவந்து பேசமுடியாது'' என்று காவல்காரன் கூறி விட்டான். இங்கு அவர்கள் வரும் வரையில் காத்துக்கொண்டிருப்பதைவிடத் தனது பாடசாலையில் சென்று விசாரிப்போம் என்று எண்ணி அங்கு நடக்கலானுள். கால் வலியினல் சரியாக நடக்கவும் கூடவில்லை. காலை வெய்யில் தீக்ஷண்யமாகக் காய்கின்றது. வெயர்வை குப்பு குப்பு என்று வழிகின்றது. வயிற்றில் ஒன்றுமில்லா

இப்பொழுது அம் மனிதர்களை "த்ரோகி, மோசக்காரர், விஷப் பாம்பு'' என்ற சொற்களைக் கூறத் துணிந்தது வியப்பா! அன்றி அத்தகைய பக்குவத்திற்குக் கொண்டு வந்துவிட்ட மனிதர்களின் சாகஸம், சாமர்த்தியம்—ஒரு வியப்பா?

மையின் கொடுமை யொரு புறம் வதைக்கின்றது. இங்ஙிலைமையில் தத்தளித்து நடந்தவாறு தன் பாடசாலையை அடைந்தாள்.

இவளைக் கண்ட மாணவிகள், உபாத்தியாயினி எல்லோரும் "திலகம்! வாம்மா! உனக்கு உடம்பு குணந்தானு! என்ன புஸ்தகம் ஒன்றுமில்லாமல் வந்திருக்கிருய்! நீ ஆஸ்பத்திரியிலிருந்து என்று வந்தாய்! ஐயோ! அன்று வந்த ஆபத்திற்கு மூவர்தான் இரையாகி விட்டார்கள். மிச்ச முள்ளவர்களேனும் பிழைத்தீர்களே!" என்றதும் திலகவதிக்குத் திடுக்கிட்டது. யார் யார் இறந்து விட்டார்கள் என்பதை அவள் அறியாள்; ஆதலால் "மூவர் இரையாகி விட்டார்களா? யார் இறந்து விட்டார்களம்மா! எனக்கு விஷயமே தெரியாதே! நான் இன்றுதான் ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறேன். என்ன விஷயங்கள் நடந்தன?" என்று பதைக்கக் கேட்டாள்.

உபாத்தியாயினி:—அம்மா! உனக்கென்ன தெரியும்? உன்னை இங்கு பிரியமாய் சேர்த்த உபாத்தியாயினி, கங்கா, எமுனு ஆகிய மூவரும் அச் சிறுத்தையினுல் மாண்டு விட்டார்கள். அவர்கள் காரியம் முடிந்து பத்து தினங்களுக்கு மேலாகிவிட்டன. உன் கதியும் சற்று இழுப்பாகத்தானிருக்கிறது என்று கூறினுர்கள். இது வரையில் நீயாவது பிழைத்தாயே!

திலக:—ஐயோ! உபயோகமான பண்டத்திற்கு உலகில் இடமில்லை. உபயோகமற்ற என் போன்ற கட்டைகளுக்கு அத்தகைய ம்ருத்யு பயமும் உண்டோ? என் பாபத்தின் பலமே எனது நோய்க்கு மருந்தல்லவா? ஹா! என்னை அருமையாக நடத்தும் தாயா இறந்து விட்டார்கள்! அவர்கள் உயிருடனிருந்தால் எத்தனை பேர்களுக்கு நன்மையுண்டாகும். அதற்குப் பதில் கடவுள் என்னை ஏன் ஸ்வீகரித்திருக்கலாகாது...அந்த அம்மாள் இறந்து விட்டதனுல்தான் அவ் வீடு பூட்டப்பட்டுள்ளதோ! அம்மணீ!

அன்பாயிருந்த காலம் மறைந்தது இப்பொழுது த்வேஷ இருள் எங்கும் சூழ்ந்துவிட்டது. இவ்விருள் என்றும் நிலைக்காது. வெகு நாட்கள் கழித்தேனும் பழைய அன்பு வெளிச்சம் அவ்விருளை நீக்கும்போது

எங்கள் வீட்டு மனிதர்கள் வேறு எந்த வீட்டிற்குக் குடி போயி ருக்கிறார்கள் உங்களுக்குத் தெரியுமா?

கௌரி:—ஆஹா! இப்போதல்லவா விளங்குகின்றது. திலக வதி! உன் உடம்பு எப்படி இருக்கிறது என்பதை விசாரிக்க எண்ணி ஒரு தினம் உங்கள் வீட்டிற்குச் சென்றேன். அந்த பெரியம்மா ஒருத்தி இருக்கிறாளே! அவள் என்னைக் கண்டதும் சீறி விழுந்தவாறே பேசத் தொடங்கி "ஏண்டி! உன் சினேகிதை யைத் தேடிக்கொண்டு வந்தாயோ! அந்த தடிச் சிறுக்கி இங்கில்லை. எங்கு எவனை இழுத்துக்கொண்டு ஓடிவிட்டாளோ!" என்றாள். எனக்கு இம்மொழி திக்கென வாரிப் போட்டது. பின்னும் நான் விடாமல் "ஏன் மாமீ! அவள் காயம் பட்டு ஆஸ்பத்திரியில் கிடப்பதாகக் கேள்விப் பட்டேனே! தாங்கள் இவ்விதம் வித்யாச மாகப் பேசுகின்றீர்களே!" என்றேன்.

அதற்கு அந்த அம்மாள் "போடீ அதிகப் பிரஸங்கி! அக்கரை யாயின் இருப்பிடம் தேடிக்கொண்டு போ; இங்கு வராதே!" என் றாள். எனக்கு வெறுப்பும், கோபமும் உண்டாகி விட்டதால் நான் போய் விட்டேன். திலகம்! இப்போதுதான் உன்னை அவர்கள் கவ னிக்கவில்லை என்பது தெரிகிறது. அவர்கள் சென்ற இடம் எனக் குத்:தெரியாதே.

திலகவதிக்கு இம் மொழிகளால் மனம் வெதும்பியது. ஐயோ! அபாண்டமாய் இவ்விதமாகவா கூறினார்கள். அவர்களுக்கு என்னுடைய நிலைமை முற்றும் தெரிந்திருக்கையில் கருணையற்று அடாத மொழியைக் கூற எண்ணமாய்த் துணிந்ததோ! அம்மணீ! நான் இத்தனை தினங்களாக ஆஸ்பத்திரியில் படுத்திருந்த செய்தி உங்களுக்குத் தெரியாதா! என் விதி என்னை ஒன்றிரண்டு வழிகளி லில்லாது பல விதமும் ஆட்டுகின்றதே! என்னைப் பற்றிய உண்மை மனிதர்களுக்குத் தெரியாவிடினும், கடவுளுக்குக் கூடவா தெரியா

நன்மை, தீமை, உண்மை அன்புடையவர்கள், போலி அன்பு காட்டிய வர்கள், அகப்பட்டதைச் சுருட்டிய அநியாயக்காரர்கள் முதலிய வேறு பாடுகள் அவ் வெளிச்சத்தில் நன்றாகத் தெரியும்.

மல் போய் விடும்? ஆபத்ரக்ஷகனுகிய அவன் கடைக்கண் நோக்கிற்குத் தெரியுமானல் அதுவே எனக்குப் போதும். அம்மணீ! நான் இப்போது அவர்கள் எங்கிருக்கிருர்கள் என்றறிவது. அங்கு செல்வதற்கே என் மனம் நடுங்குகின்றதே! என் செய்வேன்?'' என்று கண்ணீர் விட்டாள்.

இதைக் கண்ட உபாத்தியாயினி "அம்மா! திலகவதீ! கலங்காதே! யார் யார் விதி எப்படியிருக்கின்றதோ! அவ்விதம்தான் யாவும் நடக்கும். உன்னைப் படைத்த கடவுளின் ஆணை இது போலும். அவர்கள் கொடிய மிருகத்திற்கு ஒப்பாக விருப்பினும் உனக்குச் சொந்தக்காரர்கள் அவர்களே யாகி விட்டார்கள். ஆதலால் நான் என்ன சொல்லுவேன். இன்று இங்கேயே இரு. அவர்கள் எந்த வீட்டுக்கு மாறியிருக்கிருர்கள் என்பதை யறிந்து உன்னை யனுப்புகிறேன்; கண்ணீர் விடாதே!'' என்று தேற்றினள். அவளுடைய வகுப்பு மாணவிகளும் தேற்றினர்கள்.

திலகவதி உபாத்தியாயினியின் சாப்பாட்டிலேயே ஒரு கவளம் சாப்பிட்டாள். அவளுக்கு மனத்தில் திகில் அடித்துக் கொள்வதால் ஒன்றிலும் மனம் செல்லாது தவிக்கின்ருள். இடை இடையே சுகுமாரனின் அழகிய முகமும், அம்ருத மொழியும், அன்பான பார்வையும் தோன்றித் தோன்றி அததன் சக்திக்குத் தக்க விதமான உணர்ச்சிகளைக் காட்டிக் காட்டி மறைகின்றன. அவைகளை உள்ளடக்கிக்கொண்டு வகுப்பில் பழைய பாடங்களை எல்லாம் மாணவிகளின் உதவியால்:படித்துக் கொண்டிருந்தாள்.

மணி நான்கடித்ததும் பாடசாலை கலைந்தது. திலகவதிக்கு தேத்தரவு சொல்லி வந்த உபாத்தியாயினி தன் வண்டியிலேயே திலகவதியை அமரச் செய்துகொண்டு அவர்களிருந்த பழைய வீட்டுச் சொந்

சாவித்திரி கதையை ஸினிமாவில் பார்க்கும் சில ஸ்திரீகள் யமதர்மன் சத்யவான் உயிரைக் கொண்டு போக வரும் சீனில் "இவருதான் சாவித்திரி அவங்க அப்பன். பொண்ணெ பாக்க வந்திருக்கிருரு'' என்று வியாக்யானம் செய்யக் கிளம்பி விடுகிருர்கள். இத்தகையோர் பணத்தைச் செலவிட்டுப் பயன் என்ன?

தக் காரியாகிய—இறந்துவிட்ட—உபாத்தியாயினியின் உறவினரது வீட்டிற்குச் சென்றாள். அவர்களிடம் தகவல் விசாரித்ததில் வீட்டுக்காரி இறந்ததும் அவளுடைய பங்காளிகள் வந்து பிணத்தையே கைப்பற்றிக் கொண்டு சகல சொத்துக்களையும் தமது பாந்தவ்யப் படிக்கு அடைந்ததாயும், வீட்டை 10 நாள் நோட்டீஸில் காலி செய்யச் சொல்லியதாயும், அவர்களுக்கு கல்பதேவி வீதியில் வீடு கிடைத்து விட்டதால் அங்கு மாற்றப்பட்டு விட்டதாயும் தெரிந்தது. உடனே அந்த உபாத்தியாயினி அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு திலகவதியை அழைத்துக்கொண்டு அங்கு சென்றாள். அந்த வீடு ஒரு சாதாரணமான மாடி வீடாக விருந்தது. அவ் வீட்டு வாசலில் திலகவதியை இறக்கியதும், உபாத்தியாயினி "அம்மா! நீ சென்று வருகிறாயா! நான் அவசரமாக ஒரு மீட்டிங்குக்குச் செல்லவேண்டி யிருக்கிறது. ஆதலால் இறங்கி உள்ளே வருவதற்கில்லை. நீ பயப்படாமல் சென்று வா. நான் நாளைய தினம் பாடசாலைக்குப் போகும்போது கட்டாயம் உன்னை வந்து அழைத்துக் கொண்டு போகிறேன்." என்று கூறிவிட்டு வண்டியில் போய் விட்டாள்.

அந்தோ! திலகவதியின் நிலைமையை ஊகிக்கும் நமக்கே மனம் தவிக்கின்றதெனில் அவளுடைய நிலைமை எவ்விதம்தானிருக்கும்? அவளை யறியாத வேதனைகள் செய்கின்றன. தலை சுற்றுகின்றது. அபாரமான சங்கடம் தோன்றி கட்டு மீறி வதைக்கின்றது. "ஐயோ! உள்ளே சென்றால் என்ன வருமோ? என்ன சொல்வார்களோ! எத்தகைய தண்டனை கிடைக்குமோ! எத்தகைய அபாண்டங்கள் கேட்க வேண்டுமோ!" என்று நடுங்கியவாறு உள்ளே சென்றாள். கால்கள் தள்ளாடுகின்றன. நடக்கக் கூடாமல் உதறுகின்றன. வீதிக் கதவையும், நடையையும் கடந்து சென்றதும் ஒரு சிறிய ஹால் இருந்தது.

காலைமுதல் மாலை வரையில் உழைத்துவிட்டு 'அப்பா!' என்று கணவன் வீட்டுக்கு அலுத்து வர, வீட்டிலோ மனைவி அன்று தான் சினிமா போக நினைத்தது நடக்காமல் அவன் நேரம் கழித்து வந்து விட்டதற்காக திருக்கூத்தாடித் தாண்டவம் செய்து, மூஞ்சியாலடித்துக் களைத்து வந்தவனுக்குப் பரிகார மருந்து கொடுத்து விடுகிறாள்.

அவ்விடத்தில் யாரையும் காணவில்லை. சில நாற்காலிகள் மாத்திரம் கிடந்தன. அதைத் தாண்டிப் பின் கட்டிற்குச் சென்றாள். அங்கே கீச்சு, கீச்சு என்று ஊஞ்சலாடும் சப்தம் கேட்டது. அந்த கூடத்தில் போடப் பட்டிருக்கும் ஊஞ்சல் பலகையில் நமது அங்கச்சியம்மாள் அட்டகாஸமாய் அமர்ந்து, ஆநந்தமாக ஆடிக் கொண்டே இருந்தாள். அந்த உருவத்தைக் கண்டதும் திலகவதிக்கு காலனுடைய கருத்த மேனியும், பயங்கரத் தோற்றமும் கண் முன்பு கண்டு விட்டது போலான நடுக்கலுற்றது. மெல்ல அடிமேலடியாக நடந்து அந்த ஊஞ்சப் பலகையின் முன்பு வந்து மிகவும் வணக்கமாய் தாழ்ந்த குரலில் பேசத் தொடங்கி "மாமீ! நமஸ்காரம்!'' என்றாள்.

இந்த வார்த்தைகள் காதில் பட்ட உடனே மந்திரவாதியின் கையினால் சவுக்கடி பட்ட பைசாசங்கள் துள்ளிக் குதித்துத் தாண்டவமாடிப் பேராட்டங் காட்டுவதுபோல அங்கச்சியினுடைய நிலைமையாகி விட்டது. திலகவதியைக் கண்டதும், குபீரென விஷம் தலைக்கேறி ஜன்னி கண்டு அலறுபவர்களைப் போல பலமாக அலறிக் கொண்டு பெருத்த சிம்ம கர்ஜனை செய்து, கண்கள் சிவக்க, உதடு துடிக்க, படபடத்த க்ரூர பார்வையோடு "என்ன தைரியம்! மாமி நமஸ்காரமா! சீச்சீ! வெளியே போ. உம். நிற்காதே; கெட்டலைந்த கழுதை! எந்த முகத்தைக் கொண்டு, என்ன தைரியத்தைக் கொண்டு இங்கு வந்தாயடி! வெட்கங் கெட்டவளே! எங்களுடைய பெயரைக் கெடுப்பதற்காக வந்திருக்கும் ம்ருத்யுவே! உம். போ! வெளியில் போ! போ!!'' என்று கையை யாட்டி யாட்டிக் கூறிக் கொண்டே எழுந்து தத்திக் குதிக்க வாரம்பித்தாள்.

இந்த நான்காம் அவதாரத்தை (நரஸிம்மாவதாரத்தை)க் கண்ட திலகவதி பூச்சிபோல அப்படியே அடங்கி,பயந்து,வேட்டை

கலி காலத்தில் சங்கீத விருத்தி அதிகமாகி விட்டது. அதிலும் க்ராமபோனின் தசையடிக்கும் இடம் ஒன்றிரண்டல்ல. விறகு தொட்டிமுதல் க்ஷவரக் கடை வரையில் க்ராமபோன்தான். அது இல்லாவிடில் அந்தமில்லை போலும்.

நாயைக் கண்ட மான் குட்டிபோல நின்று விட்டாள். அவள் இரண்டு விழிகளிலும் அருவிபோலக் கண்ணீரைக் கொட்டுகின்றன. அங்கச்சியம்மாளுக்கு அப்போதிருந்த ஆத்திரத்தில் திலகவதியைத் தள்ளி விடுவாள் போலத் தோன்றியது.

மிகவும் பயந்து நடுங்கியபடியே திலகவதி மீண்டும் பேசத் தொடங்கி "மாமீ! தாங்கள் இத்தனை கண்டிதமாகக் கோபிக்கக் காரணம் யாதோ எனக்குப் புலப்படவில்லையே! தங்களுக்கு என் மீது திடீரென்று இவ்வளவு கோபம் உதிப்பதற்குக் காரணம் என்ன? என்னுடைய நிலைமை தமக்குத் தெரியாதா! தெரிந்திருக் கையில் தாங்களே என்னை வைதால் என......

என்று முற்றும் முடிப்பதற்குள் "போதும்! உன் பிரஸங்கம்! நிறுத்து. ஊர்மீது ஓடிவிட்டு வீட்டுக்கு வரும் பேமானியாகிய உனக்கு நான் காரணம் கூறவேண்டுமா! உனக்கு நல்ல வாட்டமாய் கிடைத்த சர்கஸ்காரனை ஏன் விட்டு விட்டு வந்து விட்டாய் பாவம். நல்ல இடுமாந்தடி போன்ற உனக்குத் தகுந்த செக்குலக்கையைப் போல ஓர் சர்கஸ்கார சாண்டோவைத்தான் பிடித்தாயே! அவனுடன் சில தினம் வாழ்ந்ததே போதும் போலாய் விட்டதா! சீச்சி! நாயே! உன்னுடைய அட்டூழியம் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாயோ! போ வெளியே; நிற்காதே!" என்று தட தடவென்று திலகவதியின் அருகில் வந்து, கழுத்தில் கையைக் கொடுத்துத் தள்ளினாள்.

ஆவேசத்தின் தூண்டுதலினால் தள்ளிவிடப்பட்ட திலகவதி ஓரே உருட்டாக எதிரிலுள்ள தூணில் மோதுண்டு கீழே விழுந்தாள். சில நிமிடங்கள் சவம்போலக் கிடந்தாள். அதன் பின்னர் தானாகவே தெளிந்து எழுந்து பார்க்கையில் நெற்றியில் ரத்தம் வழி

ஆத்திரத்தில் கண்ணைக் குத்திவிட்ட பிறகு "ஐயோ! குத்தி விட்டேனே; என்று நான் வருந்தியது எனக்கல்லவோ தெரியும்?" என்று மிக அனுதாபத்துடன் கூறுவதில் கிஞ்சித்தேனும் உபயோகமுண்டா! கொட்டிவிட்ட சாமான்களை வாரலாம்; கொட்டிவிட்ட வார்த்தைகளை வாரக் கூடுமோ?

கின்றது. அதைத் தன் முந்தாணையினாலேயே துடைத்துக்கொண்டு அங்கச்சியம்மாளின் காலில் மீண்டும் விழுந்து "அம்மா! அனியாய மான வார்த்தைகளால் என்னை வாட்டாதீர்கள். தாங்கள் நினைக் கின்றபடி நான் ஒரு குற்றமும் செய்தறியேன். வீணான பழியை என்மீது சுமத்தாதீர்கள். இதோ என் காலிலுள்ள காய வடுக்கள் இன்னும் சரியாக மாறவில்லை. என்னுடைய உண்மையை ஆஸ்பத் திரியிலுள்ள ஒவ்வொருவரும் நன்கு அறிவார்கள். அங்கு சென்று விசாரித்தால் தாங்கள் உண்மையை அறியலாம். என்னைத் தாங்கள் கண்ட துண்டமாகச் செய்தாலும் சம்மதமாக ஏற்றுக்கொண்டு ஒவ் வொரு அங்கமாகக் காட்டுவேன்; இத்தகைய அனியாய வார்த்தை யாகிய பாணத்தினால் என்னைக் கொல்லாதீர்கள்." என்று சற்று துணிகரமாகவே கூறிவிட்டாள்.

அவ்வளவுதான் அங்கச்சியம்மாளுக்கு ஆவேசம் பின்னும் அதிகரித்து விட்டது. "என்ன சொன்னாய்! உன்னை நான் கொல்லு கிறேனா! உன் உண்மையை ஆஸ்பத்திரியில் போய்க் கேட்க வேண் டுமா? ஆஹா! இவ்வளவு தைரியம் உனக்குப் பிறந்து விட்டதா! என்னையே எதிர்த்துப் பேசவும் துணிச்சல் சம்பாதித்துக் கொண் டாயா? இருக்கட்டும் தடிக்கழுதை! நாயை எந்த விடத்தில் வைக்க வேண்டுமோ அங்கே வைத்தால்தான் சரியாகக் கிடக்கும். அதை சிம்மாசனத்தில் வைத்தால் சரியாகுமா! உன் பவிஷுக்கு சர்கஸ் என்ன, வேடிக்கை என்ன?" என்று பலவிதமாகத் திட்டியவாறு, மீண்டும் கழுத்தைப் பிடித்துத் தள்ளப் போகையில் வாசற்படியி லிருந்து "என்ன! என்ன! இதென்ன யுத்தம்! அங்கச்சி! நில்லு. ஏன் திலகவதியை அப்படிச் செய்கிறாய்: அவள் என்ன செய்தாள்? ஏன் இப்படி ரத்தம் வழிகின்றது?" என்று கேட்டுக்கொண்டே அங்கச்சியின் புருஷன் கையில் ஒரு சிறிய பெட்டியுடன் அப் போதே ஊரிலிருந்து வந்தார்.

அப்போது தன் புருஷன் வருவான் என்று அங்கச்சியம்மாள் சற்றும் எண்ணவில்லையாதலால் அவள் திடுக்கிட்டாள். கக்க, புக்க

அந்த திராக்ஷை புளிப்பானது என்கிறபடி, தனது வலையில் சிக் காதவர்களைப் பற்றிப் பலர் முன் தூஷிப்பதும், பின்னர் மறைவில் வந்து மன்னிப்பு கேட்டுக் கொள்வதும் சிலருடைய கொள்கையாக விருக்கிறது.



[பக்கம் 136]

வென்று விழித்தாள். அவரைக் கண்ட திலகவதி சிறு குழந்தை யைப்போல தேம்பித் தேம்பி அழுதவாறு நடந்த சகல விருத்தாந் தங்களையும் கூறிவிட்டாள்.

அங்கச்சியம்மாளின் புருஷராகிய பசுபதிக்கு இயற்கையி லேயே சற்று இளகிய மனது உண்டு. அவர் திலகவதியிடத்தில் சற்று அன்பு கொண்டவர்; ஆதலால் இவ்விஷயங்களைக் கேட்டதும் மிக்க விசனமும், வியப்புமுற்று "ஹா! சிறத்தையா கடித்தது!...... அங்கச்சி! நீ செய்வது முற்றும் அனியாயம். நான் பலதரம் கூறி யும் நீ என் வார்த்தையைத் தட்டி அலக்ஷ்யம் செய்துவிடுகிறாய். உன்னுடைய ஆத்திரம் வர வர மிஞ்சிவிட்டது. பேசாது விலகிச் செல். பல தரம் காரணங்கள் கூறியும் உன் பிடிவாதத்தையே காட்டுகிறாய். ஐயோ, பாவம்! இப்படியா தள்ளி மண்டையை உடைப்பது?" என்று கண்டித்துவிட்டுத் திலகவதிக்கும் சமாதானம் சொல்லி இருவரையும் சமரசமுறச் செய்தார்.

பிரம்ம ராக்ஷஸிக்கு ஒப்பான மனைவியைப் படைத்துவிட்ட வர்களின் கதியைக் கூறவேண்டுமா! தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டு தவிக்க நேருகின்றது. அரக்கி போன்ற மனைவிகளுக்கு எத்தனை நய வார்த்தைகளால் நீதிகளை யுரைத்தும் அடங்காப் பிடா ரிகள் அடங்குவதில்லை. அத்தகைய படு நீலியைத் தள்ளவோ அவள் மூலம் உதித்து விட்ட குழந்தைகளின் முகங்கள் மத்தியில் திரையைப்போல மறைக்கின்றன. மனைவி என்று பெயர் வகித்த மறலியின் கொடுமைகளோ சகித்தற் கரிதாகி விடுகின்றன. இரு வகையிலும் தத்தளிக்கும் பிரபுக்களில் பசுபதியும் ஒருவர்.

சமாதானம் செய்துவிடப்பட்ட திலகவதி தன் காயத்தைத் தானே ஒரு துணியினால் கட்டிக்கொண்டு உள்ளே சென்றாள். அப் போது மாலை வேளை யாதலால் சமையல் செய்யும் வேலை தயாராக

சில தட்டார்களிடம், நகைக்கு வேண்டியதைவிட அதிகமாக பொன்னோ, வெள்ளியோ கொடுத்துவிடின் அதை அவர்கள் வேறு வேலைக்கு உபயோகப்படுத்திவிட்டு நம்மை இழுக்கடிக்கிறது போல சில அச்சாபீஸ்காரர்கள் நமது பேபரைத் தங்களது காரியங்களுக்குச் செல

விருந்தது. உடனே சென்று அந்த உத்யோகத்தில் இறங்கினாள். மனத்தில் மாறி மாறிப் பலவிதமாகத் தோன்றும் துக்கத்துடன் வழக்கம்போல வேலைகளைக் கவனிக்கலானாள். அடுத்த நாள் காலையில் தன் வேலைகளை முடித்துக்கொண்டு பாடசாலைக்குத் தயாரானாள். முன் தினம் தெரிவித்த உபாத்தியாயினி வந்து திலகவதியை அழைத்துச் சென்றாள்.

பிறகு வழக்கம்போல தன்னுடைய வேலைகள் ஒய்ந்த நேரத்தில் பாடத்தைப் படிப்பதும் பாடசாலைக்குச் செல்வதுமாக விருந்தாள். சுகுமாரன் ஊரில் இல்லாத விஷயம் அவளுக்குத் தெரியாதாகையினால் அவன் எங்கும் காணப்படவில்லையே என்று நினைத்துத் தன் வேலைகளைக் கவனித்து வந்தாள்.

சில தினங்களாயின. திலகவதிக்கு பாடசாலையில் ஒரு வேலையை தினம் உபாத்தியாயினி அளித்திருந்தாள். அதாவது பகல் சாப்பாட்டு வேளையில் அரைமணி நேரம் அன்றாடம் வரும் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கச் சொல்லி விஷயத்தைக் கேட்பாள். ஒரு தினம் பத்திரிகையில் ஒரு பெரிய புகைப்படம் காணப்பட்டது. அதில் நால்வர் வெகு ஒய்யாரமாக நின்றிருந்தார்கள். அந்நால்வரில் ஒருவன் நமது சுகுமாரன் என்பது நாம் கூறாமலேயே விளங்கும்.

அந்த உருவத்தைப் பார்த்ததும் திலகவதிக்குக் கூறவியலாத ஆச்சரியம், ஆநந்தம் எல்லாம் ஒருங்கே உண்டாகிவிட்டன. "உண்மையன்பு செலுத்திய அந்த உத்தமனைப் படத்திலாவது கண்டு களிக்கட்டும் என்று கடவுள் இதில் காட்டுகிறார்போலிருக்கிறது. ஆஹா! என்ன கம்பீரமான தோற்றம்! இந்த போட்டோவை எதற்காகப் பிரசுரித்திருக்கிறார்கள்; படிப்போம்." என்று தனக்குள் பலவிதமாக எண்ணி, அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் விஷயத்தைப் படிக்கவாரம்பித்தாள். சுகுமாரன்

வழித்து விடுவதுடன் நமக்கு வேண்டியபோது வாங்கிக் கொடாமலும் திண்டாட வைத்து விடுகிறார்கள். நமது காரியத்திற்கு வேண்டியதைவிட அதிகமாக எந்த வஸ்துவையும் யாரிடத்திலும் விட்டு வைப்பது அநுசிதம்.

பாற்கொண்ட அன்பானது அப்புகைப் படத்தைக் கண்டதும் பின்னும் சற்று உச்ச ஸ்தானத்தை யடைந்து நின்றது. அதன் கீழேயுள்ள விஷயமாவது :—

புரட்சி இயக்கத்தில் சம்மந்தப் பட்டவர்கள் கைதியானூர்கள்

(1) சோமநாதன். (2) சந்திரசேகரன். (3) சுகுமாரன். (4) சுந்தரமூர்த்தி. ஆகிய இந்நால்வரும் அரசாங்கத்திற்கு விரோதமான புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகித்து இன்று கைது செய்யப்பட்டு லாக்கப்பில் வைக்கப்பட்டிருக்கிறூர்கள். இந்நால்வரும் உயர்தரக் குடும்பத்தின ரென்றும், உயர்தரக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும் தெரிகின்றது. இவர்களுடைய கேஸில் போலீஸார் புலன் விசாரித்து வருகிறூர்கள். ;சென்ற வாரம் 10 பேர்களை புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டவர்களென்று கைது செய்து அதன் புலன் விசாரிக்கையில், அச்செய்கையில் மேற்குறித்த நால்வரும் சம்மந்தப்பட்டிருப்பதாக அனுமானம் உண்டாகியதால் போலீஸார் இவர்களையும் கைது செய்துள்ளார்கள். முழு விவரங்கள் அடுத்த இதழில் வரும்.

அதைப் படித்த திலகவதிக்குப் படத்தைப் பார்த்தவுடன் உண்டாகிய சந்தோஷத்திற்கு நேர்மாறுக விபரீதமான மன அதிர்ச்சியுண்டாகிவிட்டது. "ஐயோ! புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டிருப்பதாகவா இவர்களைக் கைது செய்திருக்கிறூர்கள்? இதென்ன அனியாயம்! தீயை மிதிப்பதுபோலான செய்தியாகவன்றோ விருக்கின்றது! இவ்வுத்தமர் தற்போது கைதியாகவா

கொஞ்ச பணம் அதிகமானூலும் நமக்கு வேண்டிய சாமான்களைப் பல கடைகளில் நேரில் விலை விசாரித்துப் பொறுக்கி பெடுப்பதுதான் நமக்கு அநுகூலமானது. விளம்பரத்தைக் கண்டு முன் பணமனுப்பிச் சாமான் கைக்கு வருகையில் சரியாயில்லாதிருப்பதைக் கண்டு வருந்தி என்ன பயன் ?

இருக்கிறார்! ஆகா! அந்த வீரனுக்கு தேசபக்தி இருப்பது உண்மையெனினும் புரட்சி இயக்கத்தில் ஒருபோதும் சேர்ந்திருக்கமாட்டாரே! அவருடைய காருண்ய குணம் ஹிம்சையைச் சற்றும் நாடாதன்றோ! ஆ கடவுளே! இதென்ன விபரீதச் செய்கையில் அந்த வீரனை அகப்படச் செய்துவிட்டாயே! இந்த கேஸ் எவ்விதம் முடியுமோ தெரியவில்லையே! நாம் அவரை எவ்விதம் பார்ப்பது? எட்டாக் கனியைக் கண்டு கோட்டாவி விடுவதுபோலன்றோ என் கதி உள்ளது! என்ன செய்வேன்?'' என்று எண்ணாததும் எண்ணி மனத்திற்குள் கலங்குகின்றாள். தன் மாறுதலை உபாத்தியாயினி கண்டுகொள்ளா திருக்கவேண்டுமே என்று சமாதானம் செய்து கொள்கிறாள். இதற்குள் பாடசாலையில் பாடம் நடக்கும் சமயம் ஆரம்பித்துவிட்டதால் எல்லோரும் வகுப்பிற்குச் சென்றார்கள்.

திலகவதிக்கோ அன்றைய பாடங்கள் சரியாகப் பாடமாயிருந்தும் அப்போதைய மனத் தடுமாற்றத்தில் ஒப்பிக்கவும், படிக்கவும், எழுதவும் கூடாமல் அனேக தப்பிதங்கள் உண்டாகிவிட்டன. எத்தனையோ சாமர்த்தியமாய்த் தன்னை யடக்கிச் சமாளித்துக் கொண்டும் அவளுடைய மனக்கவலை அதற்கு இடங் கொடாது தடுத்துவிட்டது. "ஐயோ! புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டவர்களை தீபாந்திர சிக்ஷையோ, அல்லது அனேக வருட சிறை வாசமோ, அன்றி தூக்குப் போட்டுவிடுவதுமோ செய்வார்களே! அம்மாதிரியான தண்டனைகளை எத்தனையோ பேர்கள் அடைந்திருப்பதை நாம் படித்திருக்கிறோமே. ஐயோ! இவர் கதி என்னவாகுமோ! "மீண்டும் உன்னை நான் சந்திக்க முடியுமா?'' என்று எவ்வளவோ அன்பொழுகக் கேட்டாரே! அன்றைய தினத்தில்கூட என் மனக்கிலியினால்—பெண் பேயினிடம் செல்லவேண்டுமே என்கிற அபாரமான பயத்தினால்—சரியாகப் பேசாமலிருந்துவிட்டேனே! இனிமேல்

கோபத்தை அடக்க முடியாதென்று சொல்வது சரியல்ல. ஏனெனில் ஒரே தப்பிதத்தைத் தனக்கு வேண்டாதவர்கள் செய்தால் நரஸிம்மாவதாரம் எடுக்கின்றது; ஆனால் அதையே தனக்கு மிகவும் ஆப்தமானவர்களோ அல்லது மரியாதையாக நடத்தக் கூடியவர்களோ செய்யின் அப்போது அந்தக் கோபம் எப்படியோ ஆவியாக மாறி விடுகின்றது.

அவரை எவ்விதம் பார்ப்பது? என்ன செய்வேன்?'' என்று சகிக்க வியலாத பரம வேதனையுடன் ஒருவாறு பாடங்களைப் படித்துவிட்டு மாலை வீட்டிற்கு வந்தாள்.

வேலையிலோ மனம் செல்லவில்லை. சுகுமாரனிடம் உண்டாகிய அபாரமான அன்பு முதிர்ந்த காதலின் விதை இதயக் கோட்டையில் நன்கு ஊன்றிச் சிறிது செடியாக வளரத் தொடங்கியதன் உண்மையை அப்போதே அறிந்தாள். "நான் சற்றும் மனத்தினால் நினைப்பதற்கும் அரிதான ஓர் உயிரின்மீது ஏன் என் மனம் லயித்தது? இந்த விபரீத எண்ணத்தை அவர் அறிந்தால் என்னை என்ன எண்ணுவார். ஐயோ! இதை நாம் வெளியிடுவதே கூடாது......எப்படியும் அவரை மறு முறை பார்க்கவேண்டுமென்று மனம் தூண்டுகின்றதே! எந்த விடத்தில், எத்தகைய காவலில், எவ்விதம் இருக்கின்றாரோ! கேவலம் பலவிதத்திலும் அனாதையாகிய நான் அவரை எங்ஙனம் பார்க்கக் கூடும்?'' என்று பலவிதமாக எண்ணிக் கண்ணீர் விடுகிறாள். அன்றைய பத்திரிகையை அன்றே படிக்க வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

பத்திரிகையும் வந்தது. அங்கச்சியம்மாளின் குழந்தைகளோடு விளையாடும் பாவனையாக முன்கட்டு கூடத்திற்கு வந்து, பத்திரிகையைப் பிரித்துப் பார்க்கலானாள். அங்கச்சியம்மாள் அடுத்த வீட்டு அம்மாளுவுடன் வீதியில் வம்பு பேசிக்கொண்டிருந்தாளாகையினால் 'அந்தப் பெண் பேய் வருவதற்குள் இதைப் படித்து முடித்து விடவேண்டும்' என்று எண்ணி வெகு விரைவில் படிக்கத் தொடங்கினாள்.

அன்றைய பத்திரிகையில் விசேஷம் ஒன்றும் காணப்படவில்லை. கைதிகள் நால்வரையும் ரிமாண்டில் வைத்திருப்பதாயும், அவர்களை எத்தனை விதமாகக் கேட்டும் புலன் ஒன்றும் வெளிவர

பலர் பலவித தந்திரங்களினால் பணத்தை யடித்துக்கொண்டு போகிறார்கள். சிலர் 'கோயிலுக்குக் கைங்கரியம் செய்கிறேன்'' என்கிறார்கள்; வேறு சிலர் "வீட்டில் பலமான நோயினால் அவஸ்தைப் படுகிறாள்; மருந்து வாங்க வேண்டி யிருக்கிறது'' என்கிறார்கள்; இன்னும் சிலர் "ஊரி

வில்லை என்றும், தமக்கு ஒரு விஷயமும் தெரியாதென்று அவர்கள் ஒரே வாக்காகக் கூறுகிறுர்கள் என்றும், இவ்விஷயங்களைப் பற்றி போலீஸார் வெகு தீவிரமாக விசாரித்து வருவதாயும், சுந்தரமூர்த்தி என்பவன் வீட்டில் சோதனை போட்டதில் வெடி மருந்து செய்யும் கருவிகள் சில கிடைத்திருப்பதாயும் தெரியவந்தது.

இதிலிருந்து மற்ற மூவரும் அதில் சம்மந்தப்பட்டிருக்க லாமோ என்கிற அனுமானம் பொதுமக்களுக்கு உண்டாயிருப்ப தாக மற்றொரு பக்கத்தில் எழுதி இருந்தது. அதைக் கண்டதும் திலகவதியின் கலக்கம் அதிகரித்துவிட்டது. தான் சுகுமாரனை ஒரு முறை பார்ப்பதற்கு என்ன 'விதமான சூழ்ச்சி செய்யலாம். தானே பராதீனத்தில் பரிதவிப்பவள். இதற்கு என்ன செய்வ தென்று யோசித்துக்கொண்டே இருந்தாள். ஒன்றும் புலப்பட வில்லை. அன்று பொழுது செல்ல, மறுநாள் பாடசாலைக்குச் சென்றுள்.

அங்கு சங்கிதம் கற்றுக் கொடுக்கும் சங்கரீபாய் என்ற உபாத்தியாயினியினுடைய (பீரியடு) பாடம் ஆரம்பமாயிற்று. சங்கிதம் யார் நன்ருகப் பாடுகின்ருர்களோ; அவர்களிடம் சங்கரி மிக்க ப்ரீதியாக விருப்பாள். சங்கரியின் வீட்டில் அவளும் அவள் தாயார், அண்ணன் ஆகிய மூவருமே இருக்கிருர்கள். சங்கரி தன் சிறு பிராயம் முதல் விவாகம் வேண்டாமென்று கன்னிகை யாகவே இருக்கிருள்.

சங்கரியினுடைய தாயார் சில தினங்களாகக் காய்ச்சல் கண்டு உபத்திரவப் பட்டுக்கொண்டிருக்கிருள். சங்கரியே அவளைக் கவ னித்து வருகிருள். அன்று காலையில் பாடசாலைக்கு வரும் அவச ரத்தில் பகல் ஆகாரமாகிய கஞ்சி கீழே கொட்டிவிட்டது. மேலும் அன்று உபாத்தியாயினிகள் சரியாகத் தம் தம் கடமைகளைச் செய்கி

விருந்து இப்போதே ஆள் வந்தான்; அவசரமாக அடுத்த ரயிலில் போக வேண்டி யிருக்கிறது" என்கின்றனர். ஏமாந்த சோணகிரிகள் எல்லா வற்றையும் நம்பி பணத்தைக் கொடுத்த பின்னரே மோசத்தை உணர்கி ருர்கள்.

ரூர்களா என்பதைக் கவனிக்க மேல் அதிகாரி இன்ஸ்பெக்ஷன் செய்கிற நாளாகையினுல் அதை மீண்டும் தயார் செய்ய நேரமின்றி வந்துவிட்டாள்.

பகல் 12 மணி யாகிவிட்டது. தாயாருக்கு ஆகாரம் கொடுக்க வேண்டுமே என்கிற கவலை வந்துவிட்டது. தான் அப்போது வீட்டிற்குப் போவதற்குமில்லை யாதலால் சற்று யோசித்தாள். பின்னர் தனக்கு மிகவும் பிடித்தமான பெண்கள் சிலரை யழைத்து "பெண்காள்! உங்களில் ஒருத்தி எனக்கு இச் சமயம் சற்று உதவி புரிய வேண்டும். முதலில் யார் கையைத் தூக்குகிறீர்களோ பார்க்க வேண்டும்" என்று கூறி முடிப்பதற்குள், திலகவதியே முதன்மையாகக் கையை உயர்த்தியதுடன் "நான் செய்கிறேன், நான் செய்கிறேன்" என்று ஆரவாரித்தாள்.

உடனே சங்கரி மற்ற பெண்களை யனுப்பிவிட்டு "திலகவதி! என் வீட்டிற்குச் சென்று கஞ்சி செய்து, கஞ்சியும், சில துண்டுகள் ரொட்டியும் எனது தாயாருக்குக் கொடுத்துவிட்டு முன்போல கதவைப் பூட்டிக்கொண்டு வந்து விடு. உனக்குச் சொல்ல வேண்டிய பாடத்தைப் பிரத்யேகமாக நடத்துகிறேன்; இதோ சாவி." என்று கொடுத்து அனுப்பினுள்.

திலகவதி அதை வாங்கிக் கொண்டு விரைவாகச் சென்று படுத்திருக்கும் நோயாளியைக் கண்டு "அம்மா! உங்கள் குமாரத்தி உங்களுக்கு ஆகாரம் கொடுக்கும்படி என்னை யனுப்பினுர்கள். நான் இதோ 5 நிமிடத்தில் செய்து தருகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே சென்று அடுப்பை பற்ற வைத்தாள்.

அச் சமயம் சங்கரியின் சகோதரன் அங்கு வந்தான். அவன் இயற்கையிலேயே மகா உத்தமமான குணத்தை யுடையவன். அவனுடைய மனைவி பிரஸவத்திற்காகத் தாய் வீடு சென்றிருக்கிருள்.

அவசரத்திற்கு நமக்கு உதவி புரிந்தவர்களின் பணத்தைக் கெடுவு தவருமல் கொடுக்க வேண்டுமே என்கிற எண்ணம் சிலருக்கு உண்டாவதே இல்லை. அவர்களது அகராதியில் மானம் ஆகாசம் தானே!

அவனுக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் வேலையாதலால் தினம் பகல் வேளையில்தான் வீட்டிற்கு வந்து சாப்பிடுவது வழக்கம். அன்றும் தன் சாப்பாட்டிற்காக உள்ளே வருகையில் அன்னியப் பெண்—திலகவதி—உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அப்படியே விலகிச் சென்றான்.

சங்கரியின் வீட்டிற்குத் திலகவதி அனேக தரம் வந்து பழக்கப்பட்டவள்; ஆதலால் அவள் சங்கரியின் அண்ணனைப்பற்றி நன்றாக அறிந்துள்ளாள். அவன் போலீஸ் உடையுடன் வருவதைக் கண்ட பிறகே அவன் இன்ஸ்பெக்டர் என்ற நினைவு சட்டென உண்டாயிற்று. அதே நிமிஷம் அவள் மனத்தில் அவளையறியாத ஓர் வித தைரியமும், சக்தியும் எழுந்து நின்றன. விலகிச் சென்ற நாராயணனை நோக்கி, "அண்ணா! நானும் தங்கள் சகோதரியைப் போன்றவளே! தாங்கள் ஏன் விலகிச் செல்லவேண்டும்? சாப்பிட வாருங்கள். நானே பரிமாறுகிறேன். அக்காள் என்னை யனுப்பினார்கள்; ஆதலால் வந்தேன். நான் கேவலம் அனாதை! தாங்கள் என்னையும் தமது சங்கரியைப் போல நினைத்துக்கொள்ளவேண்டும். வாருங்கள்'' என்றாள்.

திலகவதியை உற்றுக் கவனித்துப் பேச்சைக் கேட்ட பிறகே அவள் அடிக்கடி அங்கு வரும் பெண்மணி என்று அறிந்த நாராயணன் "அம்மா! நீயா! வேறு யாரோ என்று எண்ணினேன். இதோ வருகிறேன்'' என்று சொல்லி, உடைகளை மாற்றிக்கொண்டு போஜனத்திற்கு வந்தான். திலகவதி வெகு மரியாதையோடு இலை போட்டுப் பரிமாறத் தொடங்கினாள்.

திலகவதி:—தினம் தங்களுக்கு அகால போஜனமே வழக்கமாகி விட்டதே! உடம்பிற்கு ஒத்துக் கொள்கிறதா! இரவும் இப்படித்தானோ?

ஓடுகிறவனை மிரட்டுவது போலச் சிலர் காலா காலத்தில் பணத்தைக் கொடுக்கிறவர்களையே அடிக்கடி தொந்தரவு செய்கிறார்கள். பல காலமாகப் பாக்கியுள்ளவர்களைப் பற்றிக் கவனிப்பதே யில்லை.

நாராயணன்:—என்ன செய்வது? எனது உத்தியோகத்தின் கொடுமை இது. பழக்கமாகி விட்ட பின் எல்லாம் ஒத்துப் போய் விடுகிறது. நேற்று இரவு நான் சாப்பிட வருகையில் 11 மணி ஆகி விட்டது; பிறகு சாப்பாடே பிடிக்கவில்லை. பேசாமல் பாலைக் குடித்துப் படுத்து விட்டேன்.

திலகவதி:—ஏன்! இப்போது வேலைத் தொந்தரவுகள் அதிகமோ?

நாராய:—அப்பப்பா! தொந்தரவென்று சொன்னால் போதுமா! புரட்சி இயக்கம் ஒன்று எங்கள் பிராணனை வாட்டுகின்றது. அது சம்மந்தமாக அலைவது கணக்கில்லை. இந்த வேலையின் சுகமெல்லாம் ஆபத்துத்தான், அலைச்சல்தான். இப்போது நால்வர் அது விஷயமாகக் கைதியாகி இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி இப்போது எனக்கு பெருத்த கஷ்டமாகவிருக்கிறது. தினம் இரண்டு காலமும் அலைச்சல்தான்.

திலக:—அப்படியா! அந் நால்வரின் புகைப் படமுங் கூடப் பத்திரிகையில் பார்த்தேன். புலன் கிடைத்து விட்டதா! நால்வரும் குற்றவாளிகள் தானா?

நாரா:—ஏதோ ஒரு சிறிது அகப்பட்டுள்ளது. குற்றவாளியா, இல்லையா! என்பதை இப்போது கூற முடியுமா! குற்றவாளிகள் தான் என்று கைதியாக்கி உள்ளோம். போகப் போகத்தான் தெரியும்.

திலக:—இப்போது அவர்களுக்கு ஜெயில் சாப்பாடுதானா! அவர்கள் வீட்டுச் சாப்பாடா! அவர்களுடைய மனிதர்கள் வந்து பார்த்தார்களா! ஜெயிலில் யார் சென்றாலும் விடுவார்களா? அண்ணா! எனக்கும் ஜெயிலைப் பார்க்க வேண்டுமென்று அளவற்ற ஆசைதான். நான் எப்படிச் செல்வது. நான் சென்றால் பார்க்க முடியுமா?

இன்று ரொக்கம்; நாளை கடன் என்று சில கடைகளில் விளம்பரப் படுத்தி யிருப்பதுபோல சிலர் கொடுக்க வேண்டிய பணத்தை எப்போது கேட்டாலும் "நாளைக்கு, நாளைக்கு" என்று இழுக்கடிக்கிறார்கள்.

நாரா:—சே! சே! அப்படி ஒருவரையும் விடமாட்டார்கள். ஜெயிலில் இருப்பவர்களின் சொந்த மனிதர்களாக விருந்து அதிகாரியின் உத்தரவு பெற்றுச் சென்றால் அப்போது போகலாம். உனக்கு ஜெயிலைப் பார்ப்பதற்கா ஆசை! ஐயோ! எத்தனை திருடர்கள், எத்தனை கொலைக்காரர்கள், எத்தனை மோசக்காரர்கள், அடேயப்பா! அவர்களைப் பார்க்கவும் ஆசை யுண்டாகுமா!

திலக:—இல்லை யண்ணா! நாவல் முதலிய புஸ்தகங்களில் ஜெயிலைப் பற்றி வர்ணித் துள்ளதைப் படிக்கையில் அதைப் பார்க்கவேண்டும்; அந்தக் கைதிகள் எப்படித்தானிருக்கிறார்கள் என்கிற ஓர் ஆவல் உண்டாவதுண்டு. ஜெயிலில் பல திறப்பட்ட மனிதர்கள் கூட இருப்பார்களல்லவா! எல்லாம் பார்க்க வேண்டுமென்று ஆவலாகத்தானிருக்கிறது. என்ன செய்வது ?

நாரா:—அம்மா! இந்த பிரமாதத்திற்குக் கவலைப் பட வேண்டுமா! நான் வேண்டுமானால் அதிகாரியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு உன்னையும், சங்கரியையும் ஒரு தினம் அழைத்துச் செல்கிறேன்; அந்த ஆசை தீர்ந்து விடட்டும்.

திலக:—ரொம்ப சந்தோஷம். அண்ணா! எனக்கு பாடசாலை நேரத்தைத் தவிர வேறு வேளையில் வர முடியாது. அதிலேயே நீங்கள் ஏற்பாடு செய்தால் மெத்த நலம்.—என்றாள். நாராயணனும் அதற்கு இசைந்தான். பேசிக் கொண்டே தன் போஜனத்தை முடித்துக் கொண்டு எழுந்தான்.

திலகவதிக்கு இந்த எதிர்பாராத சந்திப்பும், சம்பவமும் மிக்க சந்தோஷத்தை யளித்தன. தான் ஒன்று மறியாத பாலகி போலவே நடித்து விட்டாள். பிறகு கிழவிக்கு ஆகாரத்தைக் கொடுத்துவிட்டு உத்தரவு பெற்றுக் கொண்டு பாடசாலைக்கு வந்தாள். அவள் மனத்தில் நாராயணன் என்றைக்கு அழைத்துப் போவான் என்ற எதிர்பார்ப்பே அதிகமாகி விட்டது. அவள் தன் மனத்தில் எழும் உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கொண்டே, அவன் தன்னை எப்போது கூப்பிடப் போகிறானோ என்ற விஷயத்தை நினைவிலும், கனவிலும் எண்ணிக் கொண்டு சரியான ஆகார நித்திரை யின்றி எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு தினம் வழக்கம் போல பாடசாலைக்கு வந்தாள். அன்று சங்கீத உபாத்தியாயினி சங்கரி திலகவதியை அழைத்து "அம்மா!

நாம் சற்று கஷ்டப்பட்டாவது அயலாருக்கு உதவுவோம் என்கிற எண்ணத்தை இக் காலத்தில் அடியோடு ஒழித்துவிட வேண்டும் போலும். நமக்குப் பிரதி யுபகாரம் செய்வதற்குப் பதிலாகச் சிலர் நம்மைப் பல வித கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக்கி அடியோடு அமுக்கி விடுகிறார்கள்.

திலகம்! இன்று எனது தமயனுர் சிறைச்சாலையைப் பார்ப்பதற்காக நம்மை அழைத்துச் செல்வதாகச் சொன்னுர். பிற்பகல் போகலாம்'' என்ருள். இது கேட்ட திலகவதிக்குச் சந்தோஷம் பொங்கியது. தான் தனது வகுப்பு உபாத்தியாயினியிடம் லீவு பெற்றுக் கொண்டு சங்கரியுடன் அவளது வீட்டிற்குச் சென்ருள்.

சங்கரியின் உடன் பிறந்தான் பிற்பகல் 2 மணிக்கு ஒரு மோட்டாருடன் வந்து இருவரையும் அழைத்துக் கொண்டு புறப் பட்டான். திலகவதி அவ் விருவரையும் வெகு வணக்கத்தோடு நோக்கி, "அன்பீர்காள்! நான் இன்று ஜெயில் பார்க்கச் செல்லும் விஷயம் நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். முக் கியமாக என் வீட்டாருக்குச் சற்றும் தெரியலாகாது. என்னுடைய ஆசையினுல் நான் வருகிறேன். இந்த உதவி செய்ய வேண்டும்'' என்ருள். அவ்விருவரும் அதற்கு இசைந்தார்கள்.

வண்டியும் சிறைச்சாலை வாசலில் சென்று நின்றது. மூவரும் இறங்கினுர்கள். சிறைச்சாலையின் ப்ரம்மாண்டமான இரும் புக் கதவும், ஆகாயத்தை யளாவும் மதிற் சுவர்களும், வீதியில் நிற் கும் பாராக்காரர்களும், அங்கு அரை நிஜார், அரை சொக்காய், குல்லாய், மாரில் பில்லை முதலியவற்றுடன் கைதிகள் வேலை செய்வதும் எல்லாவற்றையும் பார்க்கும்போதே திலகவதிக்கு ஆச்சரியமும், விசனமும் உண்டாயிற்று; அவைகளைப் பார்த்துக் கொண்டே நின்ருள். இன்ஸ்பெக்டரும் தான் வந்திருக்கும் விவ ரத்தை எழுதி உள்ளே யனுப்பி விட்டுப் பதிலுக்கு எதிர்பார்த் திருந்தார்.

அச்சமயம் ஜெயிலை நோக்கி, மற்றெரு வண்டி விரைவாக வந்து நின்றது. அதிலிருந்து அங்கச்சியம்மாள், அவள் புருஷன், வேறு ஒருவர் ஆகிய மூவரும் இறங்கினுர்கள். அந்தோ! கனவிலும் கருதாது தன் போக்காக நிற்கும் திலகவதி அவ் வுருவங்களைப் பார்த்ததுதான் தாமதம்; அவளது உயிரே போப்விட்டதெனலாம். "ஹா! நாம் எவ்வளவோ ரகஸியமாக வந்திருக்கையில் இவர்கள் எங்கு வந்தார்கள்?'' என்று திடுக்கிட்டு, நடு நடுங்கி தன்னிலை மையே அழிந்து பதுமை போல நின்று விட்டாள்.

முன் பணம் வாங்கியே ருசி கண்ட வேலைக்காரர்களுக்கு அதைக் கழிக்க வேண்டுமென்று சொன்னுல் அதிருப்தியுண்டாகின்றது. பின்னும் பின்னும் முன் பணம் கொடுக்காவிடில் தாங்கள் ஏதோ இனுமாக வேலை செய்வதுபோல முணு முணுத்துக் கொண்டே தங்கள் கடமையைச் சரி வரச் செய்யாது காலந் தள்ளுகிருர்கள். வேலை முடிந்ததும் கூலி கொடுப் பதுதான் இதற்குச் சரியான மருந்து.

"ஜெகன்மோகினி" அநுபந்தம்.

நீங்கள் ஆவலுடன் ஏழு வருஷக்காலமாய் எதிர்பார்த்த

"ஜெயரங்கன்"

என்னும் ஓர் துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

வெளிவந்துவிட்டது.

இராஜாம்பாள், சந்திரகாந்தா, மோஹன சுந்தரம்
ஆனந்தகிருஷ்ணன், இராஜேந்திரன்,
வரதராஜம் 1, 2, (பாகங்கள்)

ஆகிய நிகரில்லாத நாவல்களை எழுதிய

J. R. ரங்கராஜு அவர்களால்

எழுதப் பெற்றது.

டெம்மி 370-பக்கங்கள் கொண்ட இந்நாவலின் விலை ரூ 1—8—0

தபால் சிலவு வி. பி. முதலியன பிரத்தியேகம்.

மேற்சொன்ன ஸ்ரீமான் ஜே.ஆர். ரங்கராஜு எழுதிய இராஜாம்பாள் முதலிய நாவல்கள் **25**-ம் பதிப்பு வரை வெளி வந்ததே இவைகளுக்குச் சமதையான நாவல்கள் தமிழ் பாஷையில் பிரசுரிக்கப்படவில்லை யென்பதை சந்தேகமற நிரூபிக்க வில்லையா?

வேண்டியவர்கள்:—

"ஜெகன்மோகினி" ஆபீஸ்,

26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை,

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெறலாம்.

ஐ 18039

"ஜெகன்மோகினி" அநுபந்தம்.

இதைவிட

வேறு அத்தாக்ஷி என்ன?

ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு அவர்களால் எழுதப்பெற்ற

			ரூ.	அ.	ப.
"இராஜாம்பாள்"	25-ம்	பதிப்பு விலை	0	12	0
"சந்திரகாந்தா"	15-ம்	"	0	12	0
"மோஹன சுந்தரம்"	15-ம்	"	0	12	0
"ஆநந்த கிருஷ்ணன்"	12-ம்	"	0	12	0
"இராஜேந்திரன்"	11-ம்	"	1	0	0
"வரதராஜன்" முதல் பாகம்	5-ம்	"	1	0	0
ஷை இரண்டாம் பாகம்	4-ம்	"	1	0	0
"விஜயராகவன்"	3-ம்	"	1	0	0
இப்போது வெளி வந்த					
"ஜெயரங்கன்"	1-ம்	"	1	8	0

தபால் கூலி, வி. பி. முதலியன பிரத்தியேகம். தமிழ் பாஷையில் வெளி வந்த நாவல்கள் 25 வது பதிப்பு வரை வெளி வந்ததாக நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? இத்தனை பதிப்புகள் வெளி வந்ததே இவைகளுக்குச் சமானமான நாவல்கள் தமிழ் பாஷையில் இல்லவே இல்லை என்பதை திட்டமாய் ரூபிக்கவில்லையா? இந்த ஒன்பது நாவல்களில் ஏதாவதொன்றை வாசித்தால் அதன் சுவையே மற்ற 8-நாவல்களையும் வாசிக்கும்படி கட்டாயமாய் தூண்டுமென்பது திச்சயம்.

இந்த அபூர்வ நாவல்கள் வேண்டுவோர்

"ஜெகன்மோகினி" ஆபீஸ்,

26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை,

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெறலாம்.

ஒரு அரிய சந்தர்ப்பம்

இனி ஸ்திரீகளும் இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா அஷியூரான்ஸ்

கம்பெனி லிமிடெட்

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்றதென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரேக்டர்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்



குளிர்காய்ச்சல், பரு, இருமல், சுண்டு, உடைவு, தலைவலி காயம், தாடை வலி, முழங்கால் சுளுக்கு, இடுப்பு வலி கட்டி, நரம்பு நோய், பாரிச வாயு, கீல் வாயு, புண், பல்வலி ரணம் முதலியவைகளும், இன்னும் பலவித நோய்களும் வலிகளும்,

"ஜகன்மோகினி" யாய் விளங்கும்

அமிர்தாஞ்சனம்

உங்கள் கைவசமிருந்தால். பறந்து விடும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்

சென்னை ராஜதானிக்கும், மைசூருக்கும் தனி ஏஜன்டுகள் :—

சியாம் & கம்பெனி,

ந. 6. பந்தர் தெரு, சென்னை.